

அதிகாரிகள் குடுமி உங்கள் கையில்

நீங்களும் ஆடிட்டர்தான் உங்கள் ஊராட்சிக்கு

நன்கொடை ரூ.100/-









டாக்டர்.**நல்வினை.விஸ்வராஜ்**, எம்.ஏ.பி.எல்.,

க. சதீஷ்குமார், பி.ஏ.எல்.எல்.பி.,

கு. பாஸ்கர், பி.ஏ.எல்.எல்.பி.,

வெளியீடு

சாமானியனுக்கான நீதி

பத்து ரூபாய் இயக்கம்

தகவல் உரிமை சட்ட ஆர்வலர்கள் அமைப்பு

89400 06645, 94456 75801

நீங்களும் ஆடிட்டர்தான் உங்கள் ஊராட்சிக்கு

(அதிகாரிகள் குடுமி உங்கள் கையில்)

நீங்களும் ஆடிட்டர்தான் உங்கள் ஊராட்சிக்கு

(அதிகாரிகள் குடுமி உங்கள் கையில்)

வெளியீடு:-

பத்து ரூபாய் இயக்கம்

(தகவல் - உரிமை - சட்ட ஆர்வாளர்கள் அமைப்பு)

தலைமை அலுவலகம்

எண் 7 பழைய பேருந்து நிலையம்

இராசிபுரம்- 637408.

வாட்ஸ்அப்: 9445675801

பொறுப்பு துறப்பு :

இந்தப் புத்தகம் பொதுமக்கள் எளிதில் புரிந்து கொள்ளுவதற்காக சேவை மனப்பான்மையுடன் வெளியிடப்படுகிறது. இது, வியாபார நோக்கமோ, இலாப நோக்கமோ இல்லாமல் சட்டம் அனைவரும் தெரிந்துகொள்வதற்காக எல்லா விதமான கவனமும் எடுத்துக் கொள்ளப்பட்டு வெளியிடப்படுகிறது. மேலும் தாங்கள் இதனில் உள்ள சட்டப்பிரிவுகள், தீர்ப்புகள், மற்றும் சட்டத்திருத்தங்களை மற்ற வகையிலும் சரிபார்த்துக்கொள்ளவும். எனவே இதில் இருக்கக்கூடிய பிழை, அச்சுப்பிழை அல்லது விடுபடுவது ஆகியவற்றால் ஏற்படும் எவ்விதமான இழப்புக்கும் நூலாசிரியர், வெளியீட்டாளர், விற்பனை யாளர்கள் மற்றும் அச்சகத்தார் பொறுப்பல்ல என்பதனை இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நீங்களும் ஆடிட்டர்தான் உங்கள் ஊராட்சிக்கு

(அதிகாரிகள் குடுமி உங்கள் கையில்)

தணிக்கை செய்தல்

தனிநபர்கள் நிறுவனங்கள் தங்கள் வரவு செலவு கணக்குகளை ஒவ்வொரு ஆண்டும் தணிக்கை செய்து (ஆடிட்) உரிய அதிகார அமைப்புகளுக்கு அதன் அறிக்கையை கொடுப்பது போன்று கிராம ஊராட்சிகளை இரண்டு வகையில் தணிக்கை செய்யும் நடைமுறை உள்ளது. அவை கிராமசபை கூட்டத்தில் செய்யப்படும் சமூகத் தணிக்கை ஒருவகை மற்றொன்று தணிக்கை செய்யும் அதிகாரம் உள்ள அலுவலர்கள் செய்யும் தணிக்கை அதிகாரிகள் தணிக்கை செய்த பிறகு அந்த தணிக்கை அறிக்கையும் அந்த தணிக்கை அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விபரமும் கிராம சபை கூட்டத்தில் பொதுமக்களிடம் காட்டப்பட்டு கிராம சபை ஒப்புதல் பெறப்படும் வகையில் மீண்டும் ஒருமுறை ஊராட்சியின் வரவு செலவுகளை பொதுமக்கள் தணிக்கை செய்யும் அதிகாரங்களை ஊராட்சிகள் சட்டம் நமக்கு கொடுத்துள்ளது.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கிராம சபை கூட்டத்தில் பொதுமக்களிடம் வரவு செலவு கணக்குகள் அவை தொடர்பான ஆவணங்களை சுட்டி காட்டி சமூக தணிக்கை செய்யும் வாய்ப்பினை பொதுமக்களுக்கு ஊராட்சிகள் சட்டம் வழங்கியுள்ளது. மேலும் கூடுதலாக அரசு ஊழியர்கள் செய்யும் தணிக்கை அறிக்கையை கிராமசபை கூட்டத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுவதன் மூலமாக பொதுமக்களுக்கு கூடுதலாக ஆடிட்டரின் அறிக்கையை ஆய்வு செய்யும் அதிகாரத்தையும் ஊராட்சிகள் சட்டம் வழங்கியுள்ளது.

தணிக்கையாளர்கள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 193 தணிக்கையாளர்கள் அமர்த்தி தணிக்கை செய்ய சட்ட அதிகாரம் வழங்கியுள்ளது. அதன்படி அரசாணை எண் 265 நாள் 22.12.1999 இன் படி கிராம ஊராட்சிகளை தணிக்கை செய்வதற்காக துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) என்ற அலுவலரை நியமனம் செய்துள்ளது. இவர் ஊராட்சியின் அனைத்து வகையான வரவு செலவு கணக்குகளையும் தணிக்கை செய்ய அதிகாரம் கொண்டவராவார். ஊராட்சியின் திட்ட நிதி கணக்கை மட்டும் உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குனர் மற்றும் அவருடைய உதவியாளர்கள் தணிக்கை செய்வார்கள் மேலும் திட்ட நிதி கணக்கு தவிர மற்ற வரவு செலவு கணக்குகளை ஊரக வளர்ச்சி உதவி இயக்குனர் (தணிக்கை) அவர்கள் தணிக்கை செய்வார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் முடிவதற்குள் ஊராட்சி தலைவர் கிராம ஊராட்சியின் ஆண்டு கணக்கின் நகல் ஒன்றினை தணிக்கையாளர்க்கு அனுப்பி வைக்க வேண்டும். செப்டம்பர் 30-ஆம் தேதிக்குள் தணிக்கையாளர் கிராம ஊராட்சியின் கணக்குகளை தணிக்கை செய்து முடிக்க வேண்டும்.

தணிக்கை அறிக்கையில் இருக்க வேண்டிய விஷயங்கள் என்ன என்ன

1. தணிக்கை செய்யும் தணிக்கையாளரின் பெயர் பதவி

2. தணிக்கை செய்யும் காலத்தில் ஊராட்சி மன்றத்தில் பதவியிலிருந்த ஊராட்சி தலைவர், ஊராட்சி துணைத்தலைவர், ஊராட்சி செயலாளர், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்), தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) ஆகியோரின் பெயர், பதவி ,பதவி காலம்(எந்த தேதி முதல் எந்த தேதி வரை) என்ற விவரங்கள்

மாதிரி:

சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

தி.சூரக்குடி ஊராட்சி

2019-2020-ஆம் ஆண்டு அனைத்து நிதிக் கணக்கு தணிக்கை அறிக்கை

தணிக்கை காலத்தில் பதவியிலிருந்தவர்களின் விபரம்

1	தனி அலுவலர் பெயர்	திரு.எஸ்.ஸ்ரீதர், 03.04.2018 முதல் நாளது தேதி வரை
2	தலைவர் பெயர்	திரு. ஆறு.முருகப்பன்
3	துணை தலையர் பெயர்	திருமதி. ஆறு. முத்துலெட்சுமி
4	ஊராட்சி செயலர்	திருமதி.ஆர்எம். பவதாரணி
5	மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பெயர்	திருமதி. குமுதம் திரு. வி.சிவா
6	தணிக்கையாளர் பெயர் மற்றும் பதவி	திரு.ம.தவம் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) 23.03.2020 முதல் நடப்பு வரை)
7	தணிக்கை நாள்	20.07.2020
8	தணிக்கைக்குரிய காலம்	2019-2020 (01.04.2019 முதல் 31.03.2020 வரை)
9	தணிக்கை விபரம்	2019-2020-ஆம் ஆண்டு ஊராட்சி அனைத்து நிதி தணிக்கை
10	வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பெயர்	1.திரு. எல். ஸ்ரீதர், (01.04.2019 முதல் 30.11.2019 வரை) 2. திரு.எஸ்.ஸ்ரீதர், (01.12.2019 முதல் நடப்பு வரை)
11	மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பெயர்	1.திருமதி. நா. ஈஸ்வரி (01.04.2018 முதல் 15.11.2019 வரை) | 2. திருமதி. மு.குமுதம் (01.04.2019 முதல் | 15.11.2019 வரை) 3.திருமதி கேஜீபர்வதவர்த்தினி (16.11.2019 | முதல் 27.01.2020 வரை) 4. திரு. வி.சிவா (16.11.2019 முதல் நடப்பு வரை) 5. திரு.சி.ரீகன் (16.11.2019 முதல் நடப்பு வரை வரை) 6. திரு.மு.பொன்னுச்சாமி (01.02.2020 முதல் நடப்பு வரை), 7. திரு க. கண்ணன். (01.03.2020 முதல் நடப்பு வரை)

12	தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்)	திரு.நா.முனியராஜ்-தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) நாள் 01.04.2019 முதல் நடப்பு வரை
13	துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கையாளர் பெயர், விபரம்) (01.04.2019 முதல் 31.03.2020 வரை பணியாற்றியவர்கள்)	1.திரு.மு.தென்னரசு- துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) (01.04.2019 முதல் 14.02.2020 வரை) 2.திருமதி. த. மாணிக்கவள்ளி- துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை)) (15.02.2020 முதல் 22.03.2020 வரை) 3.திரு.ம. தவம்-துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை)23.03.2020 முதல் நடப்பு வரை)

3. கிராம ஊராட்சியில் நடைபெற்ற ஊராட்சி மன்றக் கூட்டங்களின் விவரம், தேதி

மாதிரி:

வ.எண்	கூட்டம் நடைபெற்ற நாள்	சாதாரணம் - சிறப்பு கூட்டம்
1	27.05.2019	சாதாரணம்
2	12.06.2019	சாதாரணம்
3	10.07.2019	சாதாரணம்
4	14.08.2019	சாதாரணம்
5	19.09.2019	சாதாரணம்
6	10.10.2019	சாதாரணம்
7	05.11.2019	சாதாரணம்
8	25.11.2019	சாதாரணம்
9	06.12.2019	சாதாரணம்
10	03.01.2020	சாதாரணம்
11	06.01.2020	பதவி பிரமான கூட்டம்
12	11.01.2020	சிறப்பு கூட்டம்
13	11.02.2020	சாதாரணம்
14	14.02.2020	சிறப்பு கூட்டம்
15	13.03.2020	சாதாரணம்

4. கிராம ஊராட்சியின் வங்கி கணக்கு எண் எந்த வங்கியில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது எந்த நிதி அல்லது தேவைக்காக அந்த வங்கி கணக்கு பராமரிக்கப்படுகின்றது என்ற விவரம்.

மாதிரி:

வ.எண்	விபரம்	வங்கிக் கணக்கு எண்	வங்கியின் பெயர் ஊர்
1	ஊராட்சி நிதி	022601000008950	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கானாடுகாத்தான்
2	தமிழ்நாடு மின்சார வாரியம்/ தநா.கு.வ.வாரியம்/மாவட்ட ஆட்சித் தலைவர்.	022601000008951	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கானாடுகாத்தான்

3	திட்டநிதி	022601000008952	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கானாடுகாத்தான்
4	தமிழ்நாடு தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டம்	6750	பாண்டியனன் கிராம வங்கி ஓ.சிறுவயல்
5	பசுமை வீடுகள்	022601000011894	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கானாடுகாத்தான்
6	ஊதிய கணக்கு	022601000014949	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கானாடுகாத்தான்

5. தணிக்கை காலத்தில் ஊராட்சிக்கு பொது மக்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட வீட்டுவரி, நூலக வரி, தொழில் வரி, தண்ணீர் வரி ,தொழில் உரிமம் மற்றும் லைசென்ஸ் கட்டணம் பல்வகை வரவுகள் மற்றும் 2சி மரவரி ஆகிய வரவு செய்யப்பட்ட தொகைகள் தொடர்பான விபரங்கள் கேட்பு வசூல் நிலுவைத்தொகை விவரங்கள்.

மாதிரி:

வ. எண்	வரி விபரம்	கேட்பு			வசூல்			நிலுவை		
		நிலுவை	நடப்பு	மொத்தம்	நிலுவை	நடப்பு	மொத்தம்	நிலுவை	நடப்பு	மொத்தம்
1	வீட்டுவரி	-	159190	159190	-	105370	105370	-	53820	53820
2	நூலுக வரி	-	15919	15919	-	10537	10537	-	5382	5382
3	தொழில் வரி	3455	80145	83600	3455	84281	88036	-	-	-
4	தண்ணீர் வரி	89400	183600	213000	89400	120000	209400	-	63600	63600
5	தொழில் உரிமம் மற்றும் லைசென்ஸ் கட்டணம்	-	2710	2710	-	1820	1820	-	890	890
6	பல்வகை	-	-	-	-	-	-	-	-	-
7	2சி	-	-	-	-	-	-	-	-	-

6. ஊராட்சியை பற்றிய பொதுவான விவரங்களான கை பம்புகள் விசைப்பம்புகள் மின்விசைப் பம்புகள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் பொது குழாய்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை அதில் தற்போது செயல்படுபவை எத்தனை செயல்படாதவை எத்தனை செயல்படாதற்கான காரணம் என்ன என்ற விவரங்கள்

மாதிரி:

வ. எண்	விபரம்	எண்ணிக்கை	செயல் படுபவை	செயல் படாதவை	செயல்படாத காரணம்
1	கைபம்புகள்	23	13	10	பழுது
2	விசைப்பம்புகள்	10	10	0	
3	மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள்	10	10	0	
4	மினிசிசைப்பம்பு	32	28	4	பழுது
5	பொதுக் குழாய்கள்				

7. கிராம ஊராட்சியில் உள்ள தெரு விளக்குகளில் குழல் விளக்குகள் எல்இடி விளக்குகள் சி எப் எல் விளக்குகள் ஹைமாஸ் விளக்குகள் மற்றும் வேறு வகையான தெருவிளக்குகள் ஆகியவற்றின் எண்ணிக்கையை அடங்கிய பட்டியல்

மாதிரி:

1	பகுழல்விளக்குகள்	0
2	எல்இடி விளக்குகள்	152
3	சி.எப்.எல. விளக்குகள்	77
4	ஹைமாஸ் விளக்குகள்	1
5	இதர வகை	0
	மொத்தம்	230

8. குடிநீர் வீட்டு இணைப்புகள் ஊராட்சியில் மொத்தம் எத்தனை அதில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கொடுத்துள்ள குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை டெப்பாசிட் பெறப்பட்ட குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை டெபாசிட் பெறப்படாத குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை மற்றும் மாதாந்திர வீட்டு குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்ட குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் அடங்கிய பட்டியல்

மாதிரி:

1	ஊராட்சியில் உள்ள மொத்த வீட்டுக்குழாய் இணைப்பு	405
2	தமிழ்நாடு கு.வ.வாரியம் அமைத்த இணைப்புகளின் எண்ணிக்கை	0
3	டெப்பாசிட் ரூ.2000/- பெறப்பட்ட இணைப்புகளின் எண்ணிக்கை	0
4	மாதம் ரூ.60/-வீதம் வசூலிக்கப்பட்ட இணைப்புகளின் எண்ணிக்கை	405

9. ஊராட்சியில் தண்ணீர் வரி கேட்பு வசூல் நிலுவை விவரங்கள் அடங்கிய பட்டியல்

மாதிரி:

வ. எண்	விபரம்	நிலுவை	நடப்பு	மொத்தம்
1	கேட்பு	89400	183600	273000
2	வசூல்	89400	120000	209400
3	நிலுவை	0	63600	63600

10. ஊராட்சியில் ஊராட்சி நிதி திட்ட நிதிகள் தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் எடுத்துக்கொண்ட வேலைகள் விபரம், முழுமையாக முடிக்கப்பட வேலைகள் விபரம், நிலுவையில் உள்ள வேலைகள் விவரம், நிலுவைக்கான காரணம் ஆகிய விவரங்கள் அடங்கிய பட்டியல்

மாதிரி:

வ. எண்	விபரம்	எடுத்த வேலைகள்	முடித்த வேலைகள்	நிலுவை	விபரம்
1	ஊராட்சி நிதி	-	-	-	-
2	தமிழ்நாடு மின்சார வாரியம் த.நா.கு.வ.வாரியம்- மாவட்ட ஆட்சித் தலைவர்	-	-	-	-
3	திட்ட நிதி	-	-	-	-
4	தமிழ்நாடு தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டம்-05	-	-	-	-

11. ஊராட்சியில் உள்ள தாய் கிராமங்கள், குக்கிராமங்களின் பெயர்கள், ஊராட்சியில் உள்ள மொத்த வார்டுகளின் எண்ணிக்கை, ஊராட்சியின் பரப்பளவு, ஊராட்சியில் உள்ள மக்கள் தொகை ஆகியவை உள்ளிட்ட ஊராட்சி தொடர்பான பொதுவான விபரங்கள்

மாதிரி:

வ. எண்	ஊராட்சியில் உள்ளடக்கிய கிராமங்களின் பெயர்கள்
1	சூரக்குடி
2	சொக்கம்பட்டி
3	பூவாண்டிபட்டி
4	நங்கம்பட்டி
5	நெற்புகபட்டி
6	மாலையிட்டான்பட்டி
7	திருவேலன்குடி
8	ஆவடைபொய்கை

ஊராட்சியில் உள்ள மொத்த வார்டுகளின் எண்ணிக்கை : 9

ஊராட்சியின் பரப்பளவு :

மொத்த வீடுகளின் எண்ணிக்கை : 1452

ஊராட்சியின் மக்கட்தொகை : ஆண் பெண் மொத்தம்

மொத்தம் 2345 2327 4672

ஊராட்சியில் அஞ்சலகம் அமைந்துள்ள இடம் : சொக்கலிங்கம் புதூர்

12. ஊராட்சியில் பணிபுரிந்து வரும் ஊதியம் பெறும் பணியாளர்களான ஊராட்சி செயலாளர் உதவியாளர்கள் மேல்நிலைத் தொட்டி இயக்குனர்கள், துப்புரவு பணியாளர்கள் போன்ற பணியாளர்களின் பெயர் மாத சம்பளம் ஆகிய விவரங்கள் அடங்கிய பட்டியல்.

மாதிரி:

வ. எண்	விபரம்	பெயர்	ஊதியம்
1	ஊராட்சி செயலர்	ஆர்எம். பவதாரணி	21288
2	மேல்நிலை தொட்டி இயக்குநர்	ஏ.கஸ்பார்	3600
		பி.ஆர்.அழகு	3600
3	துப்புரவு பணியாளர்	வீரன்	3600
		வீ.மீனாட்சி	3600

13. ஊராட்சியின் நிதிக் கணக்கு கணக்கு எண் 1இல் கிடைக்கப்பெற்ற வரவுகள் செய்யப்பட்ட செலவுகள் வருட ஆரம்ப இருப்பு(ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் இறுதி இருப்பு மார்ச் 31 வரை) அடங்கிய பட்டியல் ஓரிரு பக்கங்களில் தணிக்கை அறிக்கையில் கிடைக்கும்

ஊராட்சி நிதி கணக்கு கணக்கு எண் 1இல் அடங்கும் வரவுகள் வீட்டு வரி, தொழில் வரி, நூலக வரி, குடிநீர் கட்டணம் இதர வரவினங்கள் தொழில் உரிமம், ஏலம், மாநில நிதிக்குழு மானியம், மத்திய நிதி குழு மானியம் ,டெண்டர் ஷெட்யூல், வரைபட அனுமதி கட்டணம் ,மரம் வரி, வங்கி வட்டி டெண்டர் டெபாசிட், மனை வரைமுறை கட்டணம், திருமண மண்டபம், சமுதாயக்கூடம் வாடகை LWF, GST , வருமான வரி, செக்குரிட்டி டெபாசிட், ஆழ்துளை கிணறு கட்டணம், குடிநீர் இணைப்பு வைப்புத்தொகை ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் இந்த ஆண்டு வசூலான மொத்த தொகை இனம் வாரியாக இந்தப் பட்டியலில் கிடைக்கும்.

ஊராட்சி நிதி கணக்கு கணக்கு எண் 1 ல் செய்யப்பட்ட செலவுகள் ஊதியம், பயணப்படி மற்றும் அமர்வு படி,விசைப் பம்பு பராமரிப்பு, தெருவிளக்கு பராமரிப்பு,தெரு குழாய் உதிரிபாகங்கள் வாங்கியது, பைப்லைன் பராமரிப்பு செலவு ,பாலம் பராமரிப்பு கட்டிடங்கள் பராமரிப்பு, பொது சுகாதாரம் கூலி ,இதர செலவுகள் இதர மூலதன செலவுகள் ,OHT உதிரிபாகம் வாங்கியது மினி OHT உதிரிபாகம் வாங்கியது OHT பராமரிப்பு செலவுகள் எழுதுகோல் செலவினம், அங்கீகரிக்கப்பட்ட தெரு விளக்குகளுக்கான செலவுகள், சாலை பராமரிப்பு, குழாய்கள் பராமரிப்பு ,சுடுகாடு பராமரிப்பு ,தரைமட்ட தொட்டி பராமரிப்பு, புதிய மோட்டார் பொருத்தியது அடிபம்பு பராமரிப்பு செலவுகள், அடிபம்பு உதிரிபாகங்கள் வாங்கிய செலவு, விளம்பர செலவுகள், VPDP கட்டிடம் ,சமுதாயக் கூடங்கள் போன்ற ஊராட்சி கட்டிடங்களின் பராமரிப்பு செலவுகள் அவற்றின் மின் சாதன பராமரிப்பு செலவுகள் ஆகியவை இனம் வாரியாக செய்யப்பட்ட மொத்த செலவு விவரங்கள்.

மாதிரி:

சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்
தி.சூரக்குடி ஊராட்சி
கலராட்சி நிதிக் கணக்கு- கணக்கு எண்.1
2019-20ம் ஆண்டு தணிக்கை அறிக்கை

வரவு	தொகை	செலவு	தொகை
வீட்டு வரி	105370	ஊதியம்	69000
நூலக வரி	10537	பயணப்படி மற்றும் அமர்வுப்படி	6000
தொழில் வரி	88036	விசைபம்பு பராமரிப்பு	148036
தண்ணீர் கட்டணம்	209400	தெருவிளக்குப் பராமரிப்பு	50200
இதர வரவினம்	11000	பாலம் பராமரிப்பு	1800
தொழில் உரிமம்	1620	கட்டிட பராமரிப்பு	2600
ஏலம்	3400	தெருக்குழாய் உதிரி பாகம்	202484
மாநில நிதிக்குழு மானியம்	1692960	பைப்லைன் பராமரிப்பு	355785
14ம் நித்க்குழு மானியம்	19445	பொதுசுகாதாரம் கூலி	235149
டெ.செட்யூல்ட்	3744	இதர செலவு	89146
வரைபட அனுமதி	663801	மினி OHT உதிரி பாகம், பராமரிப்பு	157092
மரவரி	12	இதர மூலதன செலவு	355292
வங்கிவட்டி	71428	OHT உதிரி பாகம்	138320
டென்டர் டெபாசட்	5900	எழுதுபொருள் செலவினம்	26390
மனை மறு வரைமுறை கட்டணம்	1005006	அங்கிகரிக்கப்பட்ட திருவிழா செலவினம்	3600
சமுதாயகூடம் வாடகை	5750	தெருவிளக்கு உதிரி பாகம்	246279
LWF	7060	சாலை பராமரிப்பு	132056
GST	75554	குளங்கள் பராமரிப்பு	54906
IT	4709	தரைமட்ட தொட்டி பராமரிப்பு	20975
SD	16245	சுடுகாடு பராமரிப்பு	7300
ஆழ்துளை கிணறு கட்டணம்	200	புதிய மோட்டர் பொருதிதியது	202695
குடிநீர் இணைப்பு வைப்புத்தொகை	4000	பைப்லையன் விஸ்தரிப்பு	59476
		இயற்கை இடர்பாடுகள்	4500
		நூலக வரி செலுத்தியது	15919
		டென்டர் டெபாசிட் திரும்ப வழங்கியது	3730
		ஈமக்கிரிகை வழங்கியது	5000
		விளம்பர செலவினம்	65500
		குளியல்த்தொட்டி மோட்டர் பராமரிப்பு	4000
		அடிபம்பு பராமரிப்பு, உதிரி பாகம்	84500
		VPDP கட்டிடம் ஒயரிங் உதிரி பாகம்பொருதிதியது	96644
		சமுதாயகூடம் ஒயரிங் உதிரி பாகம்	195274
		நிதிமாற்றம்	280025
		GST திரும்ப வழங்கியது	18220
		வங்கி கமிஷன்	516.26
		ஆழ்துளை கிணறு, திறந்தவெளி கிணறு அகற்றுதல்	222427
மொத்தம்	4005177.00	**மொத்தம்**	3560836.26
ஆரம்ப இருப்பு (01.04.2019)	1795256.30	**இறுதியிருப்பு (31.03.2020)**	2239597.04
ஆக மொத்தம்	5800433.30	**ஆக மொத்தம்**	5800433.30

<u>வரவு செலவு அறிக்கை சுருக்கம்</u>

ஆரம்ப இருப்பு	1795256.30
வரவு	4005177.00
மொத்தம்	5800433.00
செலவு	3560836.26
இறுதியிருப்பு	2239597.04

14 ஊராட்சி நிதி கணக்கு எண் 2 தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மாவட்ட ஆட்சியர் நிதி கணக்கு தொடர்பான அந்த ஆண்டின் ஆரம்ப இருப்பு விபரம் மத்திய நிதி குழு மானியம் மாநில நிதிக்குழு மானியம் வங்கி வட்டி ஆகியவைகளில் கிடைக்கப்பட்ட வரவுகள் மின்வாரியம் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்திய கட்டணம் ஆகிய விவரங்கள் அடங்கிய பட்டியல்

மாதிரி:

ஊராட்சி நிதிக்கணக்கு எண். 2
தமிழ்நாடு மின்சார வாரியம்/தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்/ மாவட்ட ஆட்சியர் நிதிக்கணக்கு
2019-20ம் ஆண்டு வரவு செலவு அறிக்கை

வரவு	தொகை	செலவு	தொகை
மாநில நிதிக் குழு மான்யம்	650000	மின் கட்டணம்	842112
வட்டி வரவு	32226		
இதர வரவினம்	100		
14 வது நிதிக் குழு மான்யம்	150000		
மொத்தம்	832326.00	மொத்தம்	842112.00
ஆரம்ப இருப்பு	1028142.90	இறுதியிருப்பு	1018356.90
பெரு மொத்தம்	1860468.90	பெரு மொத்தம்	1860468.90

<u>வரவு செலவு அறிக்கை சுருக்கம்</u>

ஆரம்ப இருப்பு	1028142.90
வரவு	832326.00
மொத்தம்	1860468.90
செலவு	842112.00
இறுதியிருப்பு	1018356.90

15. திட்ட நிதி கணக்கு என்ற தலைப்பில் திட்டங்களுக்காக பெறப்பட்ட தொகை செலவு செய்யப்பட்ட தொகை விவரங்கள் பட்டியல் கிடைக்கும்.

மாதிரி:

திட்ட நிதிக்கணக்கு 2019-20 - ஆண்டு வரவு செலவு அறிக்கை.3

வரவு	தொகை	செலவு	தொகை
LWF	1793	GST திரும்ப வழங்கியது	56210.00
வங்கிவட்டி	91097	வைப்புத்தொகை	40582.00
GST	8929	குடிமராமத்து செலவு	178578.00
குடிமராமத்து வரவு	160648	வங்கி கமிஷன்	41.30
Laboar	17859		
மொத்தம்	280326.00	மொத்தம்	275411.30
ஆரம்ப இருப்பு (01.04.2019)	2492979.98	இறுதியிருப்பு (31.03.2020)	2497894.68
பெரு மொத்தம்	2773305.98	பெரு மொத்தம்	2773305.98

வரவு செலவு அறிக்கை சுருக்கம்

ஆரம்ப இருப்பு	2492979.98
வரவு	280326.00
மொத்தம்	2773305.98
செலவு	275411.30
இறுதியிருப்பு	2497894.68

16. வீடு கட்டும் திட்டங்கள் தொடர்பான ஊராட்சி நிதி கணக்கு 5 மற்றும் கணக்கு எண் 6 ஆகியவற்றில் திட்டங்களுக்கு வரப்பெற்ற நிதி ,கம்பி போன்ற பொருட்களுக்கு பிடித்தம் செய்யப்பட்ட தொகை பயனாளிக்களுக்கு வழங்கிய தொகை ஆகிய விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒவ்வொரு கணக்கிற்கும் தனித்தனியாக கிடைக்கும்.

மாதிரி:

ஊராட்சி நிதிக்கணக்கு எண். 5.
கலைஞர் விடு வழங்கும் திட்டம் ஆண்டு வரவு செலவு அறிக்கை
2018-19 -ஆண்டு தணிக்கை அறிக்கை

வரவு	தொகை	செலவு	தொகை
மொத்தம்	--	மொத்தம்	--
ஆரம்ப இருப்பு	--	இறுதியிருப்பு	--
பெரு மொத்தம்	--	பெரு மொத்தம்	--

<u>வரவு செலவு அறிக்கை சுருக்கம்</u>

ஆரம்ப இருப்பு	--
வரவு	--
மொத்தம்	--
செலவு	--
இறுதியிருப்பு	--

ஊராட்சி நிதிக்கணக்கு எண். 6
பசுமை வீடுகள்
2019-20 -ஆண்டு தணிக்கை அறிக்கை

வரவு	தொகை	செலவு	தொகை
பசுமை வீடுகள் திட்ட நிதி வரவு	--	பசுமை வீடு பயனாளிக்கு வழங்கியது	--
வங்கி வட்டி	--	வட்டித்தொகை திட்டஇயக்குனருக்கு வழங்கியது	--
டாக்குமென்டரி சார்ஸ்	--	இறுதி இருப்பு திட்ட இயக்குனருக்கு வழங்கியது	--
கம்பி பிடித்தம்	--		--
மொத்தம்	--	மொத்தம்	--
ஆரம்ப இருப்பு	--	இறுதியிருப்பு	--
பெரு மொத்தம்	--	பெரு மொத்தம்	--

<u>வரவு செலவு அறிக்கை சுருக்கம்</u>

ஆரம்ப இருப்பு	--
வரவு	--
மொத்தம்	--
செலவு	--
இறுதியிருப்பு	--

17. ஊராட்சி ஊழியர்களின் ஊதியம் வழங்கியது தொடர்பான ஊராட்சி நிதி கணக்கு எண் 7 ல் வரப்பெற்ற வருவாயான மாறில நிதிக்குழு மானியம் குழு காப்பீடு பிடித்தங்கள் மருத்துவ காப்பீட்டு பிடித்தங்கள் இதர பிடித்தங்கள் ஆகியவைகளும் செலவுகளுக்கான ஊதியம் கொடுத்தது முன்பணம் கொடுத்தது நிலுவைத் தொகை கொடுத்தது காப்பீடு செலுத்தியது ஆகிய விவரங்கள் அடங்கிய பட்டியல் கிடைக்கும்.

மாதிரி:

ஊராட்சி நிதிக்கணக்கு எண். 7
ஊதிய வீடுகள்
2019-20 -ஆண்டு தணிக்கை அறிக்கை

வரவு	தொகை	செலவு	தொகை
மாநில நிதிக்குழு மானியம்	315840.00	ஊதியம்	366270.00
குழுமக்காப்பீடு பிடித்த வரவு	3000.00	முன்பணம் வரவு	10000.00
வட்டி வரவு	3224.00	மருத்துவக் காப்பீடு செலுத்தியது	5096.00
மருத்துவ காப்பீடு பிடித்தம்	2160.00	ஊதியம் உயர்வு நிலுவை	14846.00
தி.மு. பிடித்தம்	300		
மொத்தம்	327224.00	மொத்தம்	396212.00
ஆரம்ப இருப்பு	111261.65	இறுதியிருப்பு	42273.65
பெரு மொத்தம்	438485.65	பெரு மொத்தம்	438485.65

வரவு செலவு அறிக்கை சுருக்கம்

ஆரம்ப இருப்பு	111261.65
வரவு	327224.00
மொத்தம்	438485.65
செலவு	396212.00
இறுதியிருப்பு	42273.65

18. திடக்கழிவு மேலாண்மை தொடர்பான ஊராட்சி நிதி கணக்கு எண் 8 வரப்பெற்ற வருவாய் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் உள்ளிட்ட விவரங்கள் பட்டியலாக கிடைக்கும்.

மாதிரி:

ஊராட்சி நிதிக்கணக்கு எண். 8
திடகழிவு மேலாண்மை
2019-20 -ஆண்டு தணிக்கை அறிக்கை

வரவு	தொகை	செலவு	தொகை
ஊதியம்	156000.00	ஊதியம்	13000.00
வங்கி வட்டி	519.00	வங்கி கமிஷன்	42.00
மொத்தம்	156519.00	மொத்தம்	130042.00
ஆரம்ப இருப்பு (01.04.2019)	15575.00	இறுதியிருப்பு (31.03.2020)	42052.00
பெரு மொத்தம்	172094.00	பெரு மொத்தம்	172094.00

வரவு செலவு அறிக்கை சுருக்கம்

ஆரம்ப இருப்பு	15575.00
வரவு	156519.00
மொத்தம்	172094.00
செலவு	130042.00
இறுதியிருப்பு	42052.00

19. மற்ற கணக்குகள் கிடைக்கப்பெற்ற தொகை,செலவு செய்யப்பட்ட விவரங்கள் ஏதாவது இருப்பின் அது பட்டியலாக கிடைக்கும்.

20. தணிக்கை அறிக்கையின் முக்கியமான பகுதி அதனுடைய அனைத்து நிதிக் கணக்கு அறிக்கை என்ற தலைப்பில் பத்தி எண்கள் என்று குறிப்பிட்டு தெரிவிக்கப்பட்டுள்ள பகுதியாகும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பத்தி என்ற வார்த்தை குற்றச்சாட்டு குறைபாடு கண்டறியப்பட்ட குறைகள் குற்றச்சாட்டை சரி செய்யப்பட வேண்டிய குறைகள் என்ற பொருளில் எடுத்துக் கொள்ள வேண்டும் ஆங்கிலத்தில் இதை PARA WEAR REMARKS என்று சொல்வார்கள் அதனை தணிக்கை அறிக்கையில் பாரா என்று குறிப்பிடுவார்கள்.

மாதிரி:

சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்
தி.சூரக்குடி ஊராட்சி
2019 - 2020 ஆம் ஆண்டு அனைத்து நிதிக்கணக்கு அறிக்கை

பத்தி எண். :1

வீட்டு வரி வசூல் - 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் அமுல்படுத்ததால் வருவாய் குறைவு- குறைபாடு.

2019-2020 ஆம் ஆண்டு வீட்டுவரி கேட்புத் தொகையில் ரூ. 88600/- வசூல் செய்யப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண். 255 ஊரக வளர்ச்சித் துறை நாள் 13.12.1999 மற்றும்1994 ஊராட்சி சட்டப்பிரிவு 172 (1)அட்டவணை 1ன்படி வீட்டு வரியானது மூலதன அடிப்படை, வருடாந்திர அடிப்படை அல்லது கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்ட கட்டிடத்தின் பரப்பின் அடிப்படையில் வீட்டு வரி நிர்ணம் செய்யப்பட வேண்டும்.

கட்டிடத்தின் வகைப்பாடு		**நிர்ணயம் செய்யப்பட வேண்டிய விபரம்**
கான்கிரிட் வீடுகள் மற்றும் தார்ஸ் தளமிட்ட வீடுகள் மாடி வீடுகள்	கட்டிடப் பரப்பில் 9.29 சதுர டெசி மிட்டருக்கு/ சதுர அடிக்கு	ரூ. 0.50 பைசா முதல் 1.00 வரை

ஓடு வேயப்பட்ட வீடுகள்	கட்டிடப் பரப்பில் 9.29 சதுர டெசி மிட்டருக்கு/ சதுர அடிக்கு	ரூ. 0.30 பைசா முதல் 0.60 வரை
கூரை வேயப்பட்ட வீடுகள்	கட்டிடப் பரப்பில் 9.29 சதுர டெசி மிட்டருக்கு/ சதுர அடிக்கு	ரூ. 0.20 பைசா முதல் 0.40 வரை

மேலும் சாதாரண வணிகம் போன்ற சிறுகடைகளுக்கு 20 சதவீதம் மேல்வரியும், வியாபரா நிறுவனம், திரையரங்கம், குடியிருப்பு விடுதிகள், ஆகியவற்றிற்கு 60 சதவீதம் மேல் வரியும் நிர்ணயம் செய்யப்பட்டு, வீட்டுவரி வசூல் செய்யப்பட வேண்டும். ஆனால் இந்நடை முறை பின்பற்றப்படாததால், வீட்டுவரி தலைப்பில் வரவு மிகவும் குறைவாக உள்ளது. ஊராட்சிக்கு நிதியிழப்பு ஆகும். எனவே வீட்டு வரி நிர்ணயம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

பத்தி எண். : 2

2019 - 2020 ஆம் ஆண்டு நூலக வரி ரூ.8860/- செலுத்தப்படாதது - குறைபாடு.

தணிக்கையாண்டில் இவ்வூராட்சிக்கு நூலகவரியாக ரூ.8860/- ஊராட்சி கணக்கில் வரவாகியுள்ளது. இத்தொகை மாவட்ட நூலக ஆவணக்குழுவுக்கு உரியதாகும் தணிக்கையாண்டில் வசூலான நூலக வரி ரூ. 8860 /- மாவட்ட நூலக ஆணையக் குழுவிற்கு செலுத்தப்படவில்லை. எனவே உடன் உரிய தலைப்பில் செலுத்தி சலான் நகல் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண்.:3

தொழில் உரிமம் (D & O Trade) பதிவேடு தணிக்கைக்கு காண்பிக்கப்படாதது குறைபாடு.

இவ்வூராட்சியல் தொழில் உரிமம் பதிவேடு காண்பிக்கப்படவில்லை. ஆனால் தணிக்கையாண்டில் வசூல் செய்யப்படவில்லை. தொழில் உரிமக்கட்டணம் வசூல் தணிக்கையில் மிகவும் குறைவாக கருதப்படுகிறது. தொழில் நிறுவனங்கள் மற்றும் கடைகள் பதிவேட்டில் முறையாக பதிவு செய்து கேட்பு நிர்ணயம் செய்து வசூல் செய்து தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண் : 4

தொழில் வரி ரூ.33335/- வருமானம் விபரங்கள் காண்பிக்கபடவில்லை - குறைபாடு.

தணிக்கையாண்டில் இவ்வூராட்சிக்கு தொழில் வரி கேட்பு மற்றும் நிலுவைத் தொகை (கேட்பு ரூ.33335/- மட்டும் வசூல் செய்யப்பட்டுள்ளது. தொழில்வரி வசூலின் சரித்தன்மை அறிய வருமான விபர அறிக்கைகள் தணிக்கைக்கு காண்பிக்கப்படவில்லை. 1994ஆம் ஆண்டு தொழில்வரி சட்டப்படி ஊராட்சி பதிவில் உள்ள அனைத்து மத்திய, மாநில நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் வணிகர்கள் மற்றும் இதர நிறுவனங்கள் விபரங்கள் பணியாளர்கள் விபரங்கள் அடங்கிய முதன்மை பதிவேடு தயார் செய்து சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் அலுவலகங்களில் பணம் பெற்றுத் தரும்

அலுவலர்களிடமிருந்து ஊதியம் பெறும் விபர அறிக்கை பெறப்பட்டு அதனடிப்படையில் தொழில் வரி விதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

பத்தி எண் : 5

பணிப்பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படாதது – குறைபாடு

இவ்வூராட்சியில் பணிபுரியும் ஊராட்சி செயலர் முதலான பணியாளர்களுக்கு பணிப்பதிவேடு பேணப்படாமல் உள்ளது. உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிப்பதிவேடு பேணப்பட்டு பணி விபரங்கள் முழுமையாக பதிவு செய்யப்பட்டு பதிவுகள் சரிபார்க்கப்பட்டு சான்றொப்பம் பெறப்படவேண்டும். மேல்நிலை நீர்த்தொட்டி இயக்குபவர்களுக்கு பணிச்சுருள் பேணப்படவில்லை. உரிய விபரங்களுடன் பணிச்சுருள் பேணப்பட்டு தணிக்கைக்கு காண்பிக்கப்படல் வேண்டும்.

பத்தி எண். :6

நிதி நிலை அறிக்கை கிராமசபை ஒப்புதல் பெறப்படாதது - குறைபாடு

2019-20 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை (படிவம் 31) கிராமசபை மற்றும் ஊராட்சி தீர்மானத்தில் வைத்து அங்கீகாரம் பெற்று அதன் விபரம் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண்.:7

காசோலை அடிக்கட்டை (Cheque Counter Foils) தணிக்கைக்கு காணபிக்கப்படாதது - குறைபாடு

இவ்வூராட்சியில் செயல்படுத்தப்படும் ஊராட்சி நிதி, வரையறுக்கப்பட்ட நிதி, திட்ட நிதி ஆகியவற்றின் செயல்பாடுகளுக்கான செலவினங்கள் வங்கி கணக்குகளில் காசோலை வழி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வழங்கப்பட்ட காசோலைகளின் அடிக்கட்டை (Cheque Counter Foils) தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும். இதனால் வழங்கப்பட்ட காசோலைகளின் சரித்தன்மை வழங்கப்பட்ட நாள், பணியாளருக்கு காசோலை வழங்கப்பட்ட விபரம் ஆகியவைகளை தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை. எனவே காசோலைகளின் அடிக்கட்டைகள் தணிக்கைக்கு காண்பிக்கப்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

பத்தி எண். :8

குழுமக்காப்பீடு ஊராட்சிப் பணியாளர்களுக்கு செலுத்தப்படாதது - குறைபாடு.

அரசு ஆணை எண். 747/ நிதி (ஒய்வூதியம், நாள் 31.03.1998ன்படி) ஊராட்சியில் பணிபுரியும் உள்ளாட்சி பணியாளர்களுக்கு குழுமக்காப்பீட்டுச் சந்தா ரூ. 30/- மற்றும் ஊராட்சி பங்குத் தொகை ரூ. 55/-. சேர்த்து அரசு நிதியில் உரிய தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். ஆனால் இவ்வூராட்சியில் உள்ளாட்சிப் பணியாளர்களுக்கு குழுமக் காப்பீட்டு சந்தா மற்றும் பங்குத் தொகை ஆகியன தணிக்கைக் காலத்தில் அரசு தலைப்பில் செலுத்தப்படவில்லை.

01.04.2019 முதல் 31.03.2020 வரை குழுமக்காப்பீடு மற்றும் ஊராட்சி சந்தாத் தொகை உடனடியாக அரசுத் தலைப்பில் செலுத்தப்பட்டு தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண். :9

தெருவிளக்கு பராமரிப்பு - கூடுதல் செலவினம் ரூ. 104620/- - குறைபாடு.

தணிக்கையாண்டில் இவ்வூராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பிற்கு ரூ. 104620/- செலவிடப்பட்டுள்ளது. ஆனால் அரசு ஆணை எண். 223 ஊரக வளர்ச்சித் துறை நாள் : 19.02:1994ன்படி ஒரு தெருவிளக்கிற்கு ரூ. 300/- வீதம் ஓராண்டுக்கு பராமரிப்புச் செலவினமாக மேற்கொள்லாமென உள்ளது. ஆனால் இவ்வூராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பிற்கு (172 X 300 = ரூ.51,600/-) ரூ.1420/- கூடுதல் செலவினம். மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மேலும் படிவம் 17 மற்றும் படிவம் 18 முறையாக பராமரிக்கப்படவில்லை. எனவே பராமரிப்பு பணி செய்த விபரம் தணிக்கையில் அறிய இயலவில்லை. கூடுதல் செலவினம் தணிக்கைக்கு உட்படுத்தப்படுகிறது. இச்செலவினத்திற்கு உரிய விபரம் வழங்க வேண்டும்.

பத்தி எண். :10

விசைப்பம்பு பராமரிப்பு - கூடுதல் செலவினம் - ரூ.190600/- - குறைபாடு.

தணிக்கையாண்டில் இவ்வூராட்சியில் விசைப்பம்பு பராமரிப்பிற்கு ரூ.190600/- செலவிடப்பட்டுள்ளது. ஆனால் ஆரசு ஆணை (நிலை) அ எண். 64 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் : 20.06.2006ன்படி ஒரு ,விசைப்பம்பிற்கு ரூ. 7,500/-, கைப்பம்பிற்கு ரூ. 600/- வீதம் ஓராண்டுக்கு பராமதிப்புச் செலவினமாக மேற்கொள்லாமென உள்ளது. ஆனால் இவ்வூராட்சியில் பின்வரும் விபரப்படி பராமரிப்பிற்கு கூடுதல் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ரூ. 5,000/-க்கு மேற்பட்ட செலவினத்திற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்படவில்லை.

மேலும் படிவம் 17 மற்றும் படிவம் 18 முறையாக பராமரிக்கப்படவில்லை. எனவே பராமரிப்பு பணி செய்த விபரம் தணிக்கையில் அறிய இயலவில்லை. கூடுதல் செலவினம் தணிக்கைக்கு உட்படுத்தப்படுகிறது. இச்செலவினத்திற்கு உரிய விபரம் வழங்க வேண்டும்.

பத்தி எண். : 11

வரைபட அனுமதி பதிவேடு மற்றும் மனையிட பிரிவு பதிவேடு பராமரிக்கப்படாதது -குறைபாடு

தணிக்கையாண்டில் இவ்வூராட்சியில் வரைபட அனுமதிக்கட்டணம் மற்றும் மனையிட அனுமதி கட்டணம் ரூ. 144131 / வசூல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அரசு ஆணை எண். 255 ஊ.வது (சி2) நாள் 31.12.1999-ல் குறிப்பிடப்பட்டுள்ள படி அனுமதி கோரப்பட்ட வரைபடங்களுக்கு சதுர மீட்டர் அடிப்படையில் கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளதா? சதுர மீட்டருக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை விபரத்திற்கு ஊராட்சி தீர்மானம்

காணர்பிக்கப்படாததால் பெறப்பட்ட கட்டணம் சரிதானா? என தணிக்கையில் அறியமுடியவில்லை. மேலும் மனைபிரிவு வழங்கப்பட்டதற்குரிய பதிவேடுகள் தணிக்கைக்கு காணர்பிக்கப்படவில்லை.

பத்தி எண். : 12

பைப்லைன் பராமரிப்பு செலவினம் - ரூ. 63740/-குறைபாடு.

தணிக்கையாண்டில் ஊராட்சியில் கீழ்க்கண்டவாறு பைப்லைன் பராமரிப்பு பணி மேற்கொண்டமைக்கு ரூ. 63740/- செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ரூ. 5,000/-க்கு மேற்பட்ட பணிகள் அனைத்தும் ஒளிவு மறைவு இல்லாத ஒப்பந்தச்சட்டம் 49, 1998 மற்றும் அரசாணை எண் 446, நிதித்துறை 28 ஊரக வளர்ச்சித்துறை நாள்: 31.12.1998 ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியினை செயல்படுத்தப் படவில்லை.

ஒரு நிதியாண்டில் ரூ. 5,000- வரை மதிப்பீடு இன்றி செலவு செய்து கொள்ளலாம். ஆனால் மேற்காணும் கூடுதல் செலவினத்திற்கு அனுமதி மற்றும் மதிப்பீடு இல்லை.

பைப்லைன் பழுது குறித்த விபரம் இல்லை. பழுது புகார் பதிவேடு காண்பிக்கப்படவில்லை. பணி செய்தமைக்கு புகைப்படம் இல்லை. தொழில்நுட்ப அனுமதி பெறப்படவில்லை. மேலும் தொகை வழங்கியமைக்கு ஒப்புதல் பெறப்படவில்லை. எனவே மேற்காணும் செலவினம் தணிக்கைக்கு உட்படுத்தப்படுகிறது. இச்செலவினத்திற்கு உரிய விபரம் வழங்க வேண்டும்.

பத்தி எண். :13

பொது சுகாதாரம் மற்றும் இதர செலவு - குறைபாடு.

தணிக்கையாண்டில் இதர செலவினம் மற்றும் பொது சுகாதாரம் ஆகிய தலைப்புகளில் கீழ் ரூ.210023/-க்கு செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிதியாண்டில் ரூ.5,000/-ம் வரை மதிப்பீடு இன்றி பணிகள் மேற்கொள்ளலாம். ஆனால் ஊராட்சியில் ரூ.5,000/-க்கு மேற்பட்டு இதர செலவினம் மற்றும் பொது சுகாதாரம் மதிப்பீடு இல்லை, முன் அனுமதி ஏதும் பெறப்படவில்லை. எனவே செலவினம் தணிக்கைக்கு உட்படுத்தப்படுகிறது.

பத்தி எண். :14

ஒப்பந்ததாரர் புதுப்பித்தல் கட்டணம் முறையாக வசூல் செய்யப்படாதது - குறைபாடு.

ஊராட்சியில் பணிகள் மேற்கொள்ள பதிவு செய்யப்படும் ஒப்பந்ததாரர் ஆண்டுதோறும் புதுப்பித்தல் கட்டணம் ரூ.1000/- வசூலிக்கப்பட வேண்டும். தணிக்கையாண்டில் இவ்வூராட்சியில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களிடம் வசூல் செய்யப்படவில்லை. எனவே உரிய ஒப்பந்ததாரர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டு அதன் விபரம் தணிக்கைக்கு, காண்பிக்கப்படவேண்டும். மேலும் ஒப்பந்ததாரர் பதிவேடு முறையாக பராமரிக்கப்பட்டு தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண் : 15

மீன்பாசி ஏலம் நடத்தப்படாதது -- குறைபாடு

தணிக்கையாண்டில் இவ்வூராட்சியில் மீன் பாசி ஏலம் நடத்தப்படவில்லை. அரசு ஆணை எண்.189 நாள் 16.08.1999ன்படி ஊராட்சியிலுள்ள நீர்நிலைகளில் மீன் பிடிப்பதற்கான ஏலத்தை ஊராட்சி நிர்வாகம் நடத்தி ஏலத் தொகையினை ஊராட்சி நிதியில் வரவு வைக்கப்படவேண்டும். தணிக்கையாண்டில் இத்தலைப்பின்கீழ் தொகை ஏதும் வரப்பெறவில்லை. இது ஊராட்சிக்கு நிதியிழப்பாக கருதப்படுகிறது. எனவே ஏலம் நடத்தப்படாததற்கான உரிய விளக்கத்தினை தணிக்கைக்கு தெரிவிக்கப்பட வேணடும்.

பத்தி எண் : 16

கழிவுப் பொருட்கள் ஏலம் விடப்படாதது - குறைபாடு

தணிக்கையாண்டில் இவ்வூராட்சியில் கழிவுப்பொருட்கள் ஏலம் விடப்படவில்லை. அரசு ஆணை என். 169 ஊ.வ.து நாள் 16.08.1999ன்படி ஊராட்சியிலுள்ள கழிவுகளை ஏலம் விட்டு நிர்வாகம் நடத்தி ஏலத் தொகையினை ஊராட்சி நிதியில் வரவு வைக்கப்படவேண்டும். ததணிக்கையாண்டில் இத்தலைப்பின்கீழ் தொகை ஏதும் வரப்பெறவில்லை. இது ஊராட்சிக்கு நிதியிழப்பாக கருதப்படுகிறது. மேலும் பதிவேடு 21ல் உள்ள இருப்பு கழிவுப்பொருட்களை உதவி பொறியாளர் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு ஏலம் நடத்தி உடன் வரவு வைத்து தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண். :17

பதிவேடுகள் பேணப்படாதது - குறைபாடு.

இந்த ஊராட்சியில் தணிக்கையாண்டில் கீழ்க்கண்ட பதிவேடுகள் காண்பிக்கப்படவில்லை.

1. கட்டிட வரைபட அனுமதி பதிவேடு
2. வைப்புத் தொகை பதிவேடு
3. மின் கட்டணப்பதிவேடு
4. ஒப்பந்ததாரர் பதிவேடு
5. டெண்டர் பதிவேடு

மேலும் 1, 16, 22, 24, 27 மற்றும் 31 (Budget) பராமரிக்கப்படவில்லை. படிவம் 13 பதிவுகள் ரொக்கப்புத்தகப்படி இணக்கம் இல்லை. படிவம் 17, 18 முழுமையாக எழுதப்படவில்லை. பராமரித்து தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண் : 18

தணிக்கையாண்டில் இவ்வூராட்சியில் கீழ்கண்ட விபரப்படி மாநில அரசிடமிருந்து வரப்பெற்ற மானிய விபரங்களுக்கான உரிய செயல்முறை ஆணைகள் தணிக்கைக்கு காணர்பிக்கப்படவில்லை.

பத்தி எண் : 19

ஊராட்சியில் தெரு விளக்கு குடிநீர் மற்றும் அரசு கட்டிடங்களுக்கு மின் கட்டண கேட்புகுரிய கட்டண அட்டை பெறப்பட்டு தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும். மேலும் நிலுவையின்றி மின் கட்டணம் செலுத்த வேணடும்.

பத்தி எண். : 20

தணிக்கையாண்டில் ஊராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்ட வீடுகள், பசுமை வீடுகள் திட்ட வீடுகள் அனைத்தும் முடிக்கப்பட வேண்டும். மேலும் ஊரக வீடு வழங்கும் திட்ட வீடுகள் நிலுவையில் உள்ளவற்றை உடனடியாக முடிக்கப்பட வேண்டும். வீடுகள் இறுதிப்பட்டியல் அனுமதிக்கப்பட்ட விபரம் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண் : 21

தணிக்கையாண்டில் ஊராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பசுமை வீடுகள் திட்ட வீடுகள் அனைத்தும் முடிக்கப்பட வேண்டும். வீடுகள் இறுதிப்பட்டியல் அனுமதிக்கப்பட்ட விபரம் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண் : 22

நிதியாண்டின் இறுதியில் வங்கிகள் இறுதி இருப்பு உறுதி செய்யப்பட்டு சான்றிதழ் பெறப்பட்டு தணிக்கைக்கு காண்பிக்கப்படாது - குறைபாடு.

தணிக்கையாண்டில் இவ்வூராட்சியில் செயல்படுத்தப்படும் அனைத்து நிதி கணக்குகளுக்கும், கணக்கு பேணப்பட்டுவரும் வங்கி மேலாளரிடமிருந்து 31.03.2020க்கான இறுதி இருப்பு இணக்கச்சான்று பெற்று தணிக்கைக்கு காண்பிக்கப்படவில்லை. இதனால் இறுதி இருப்பின் சரித்தன்மையை உறுதி செய்ய இயலவில்லை. எனவே உரிய இறுதி இருப்பு சான்று பெற்று தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

21. ஊராட்சி தணிக்கையில் கண்டறியப்பட்டுள்ள குறைபாடுகள் ஒவ்வொன்றையும் பத்தி எண்ணிட்டு அதைப் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் தெரிவிப்பார்கள் (எ கா) பத்தி என் 18 தெருவிளக்கு பராமரிப்பு கூடுதல் செலவினம் ரூபாய் 1,04,620 குறைபாடு தணிக்கை ஆண்டில் இந்த ஊராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பதற்கு ரூ 1,04,620 செலவிடப்பட்டுள்ளது. அரசு ஆணை எண் 223 ஊரக வளர்ச்சி துறை நாள் 19.02.1994 ன் படி ஒரு தெரு விளக்குக்கு ரூ 300 வீதம் ஓராண்டிற்கு பராமரிப்பு செலவினமாக மேற்கொள்ளலாம் என அரசாணை உள்ளது. இந்த ஊராட்சியில் 172 தெருவிளக்குகள் உள்ளன 172 x 300 = 51,600 அந்த வகையில் 53,020 கூடுதலாக செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது மேலும் புகார் புத்தகம் படிவம் 17 மற்றும் படிவம் 18 முறையாக பராமரிக்கப்படவில்லை எனவே பராமரிப்பு பணி செய்த விபரம் உண்மைத் தன்மையை தணிக்கையில் அறிய இயலவில்லை கூடுதல் செலவினத்தை தணிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றது.இந்த செலவினத்திற்கு உரிய முழு விபரம் வழங்கப்பட வேண்டும் என்று தணிக்கை அறிக்கையில் குறைபாடு பற்றி மிக இரத்தின சுருக்கமாக தெளிவாக தெரிவித்து இருப்பார்கள்.
22. தணிக்கை அறிக்கையில் இறுதியில் தணிக்கை செய்த அலுவலர் தணிக்கை செய்யப்பட்டதற்கான சான்று செய்து கையொப்பமிட்டு அதன் அசலை ஊராட்சி மன்ற தலைவருக்கும் நகலை கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலருக்கும் மாவட்ட அளவிலான உதவி இயக்குனர் (தணிக்கை) அவர்களுக்கும் நகலிட்டு

அனுப்பி வைப்பார்கள்.

மாதிரி:



துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,(தணிக்கை),
சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

பெறுநர் :-
தலைவர்,
தி.சூரக்குடி ஊராட்சி.

நகல் :-
1. உதவி இயக்குநர் (தணிக்கை) சிவகங்கை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2.வட்டாரா வளர்ச்சி அலுவலர் (கி. ஊ),, சாக்கோட்டை

சிறப்பு தணிக்கை

மாவட்ட ஆட்சித் தலைவர் ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற அதிகாரத்தை பயன்படுத்தி கிராம ஊராட்சியில் ஊழல், நிர்வாக சீர்கேடுகள், முறைகேடுகள் பற்றி மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு வரும் போது பொதுமக்கள் புகார் செய்துள்ள நிலையில், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் புகார் செய்துள்ள நிலையில் சிறப்பு தணிக்கை செய்வதற்காக உத்தரவிடலாம். ஏற்கனவே தணிக்கை செய்யப்பட்டு இருந்தாலும் அந்த கணக்குகளை மீண்டும் தணிக்கை செய்வதற்கு உத்தரவிடலாம்.

மாவட்ட ஆட்சியரின் உத்தரவு அடிப்படையில் கிராம ஊராட்சியை குறிப்பிட்டுள்ள காலத்திற்கான கணக்கு வழக்குகளை முழுமையாகவும் அல்லது புகாரில் குறிப்பிட்டுள்ளார் முறைகேடுகள் தொடர்பாக தணிக்கை செய்வதற்கு உத்தரவிட்டு செய்யப்படும் தணிக்கை சிறப்பு தணிக்கையாகும். சிறப்பு தணிக்கையில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் மீது மாவட்ட ஆட்சியர் பிரிவு 203ல் உள்ள அதிகாரங்கள் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க உத்தரவிட வாய்ப்பு உள்ளது.

சிறப்பு தணிக்கை நடந்த கோரி புகார் மனுவை அந்த ஊராட்சி சார்ந்த வாக்காளர்கள் மட்டுமல்லாமல் யார் வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஏனென்றால் கிராம ஊராட்சி மத்திய, மாநில அரசுகளிடம் மானியங்கள், உதவி தொகைகள் பெற்று செயல்படு வதால் என்னுடைய பணம் என்னுடைய உரிமை என்ற அடிப்படையில் புகார் மனுவை இந்திய குடிமகன் யார் வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

மாதிரி தணிக்கை அறிக்கை -1

சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

தி.சூரக்குடி ஊராட்சி

2019-2020-ஆம் ஆண்டு அனைத்து நிதிக் கணக்கு தணிக்கை அறிக்கை

1.தணிக்கை காலத்தில் பதவியிலிருந்தவர்களின் விபரம்

1	தனி அலுவலர் பெயர்	திரு.எஸ்.ஸ்ரீதர், 03.04.2018 முதல் நாளது தேதி வரை
2	தலைவர் பெயர்	திரு. ஆறு.முருகப்பன்
3	துணை தலையர் பெயர்	திருமதி. ஆறு. முத்துலெட்சுமி
4	ஊராட்சி செயலர்	திருமதி.ஆர்எம். பவதாரணி
5	மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பெயர்	திருமதி. குமுதம் திரு. வி.சிவா
6	தணிக்கையாளர் பெயர் மற்றும் பதவி	திரு.ம.தவம் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) 23.03.2020 முதல் நடப்பு வரை)
7	தணிக்கை நாள்	20.07.2020
8	தணிக்கைக்குரிய காலம்	2019-2020 (01.04.2019 முதல் 31.03.2020 வரை)
9	தணிக்கை விபரம்	2019-2020-ஆம் ஆண்டு ஊராட்சி அனைத்து நிதி தணிக்கை
10	வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பெயர்	1.திரு. எல். ஸ்ரீதர், (01.04.2019 முதல் 30.11.2019 வரை) 2. திரு.எஸ்.ஸ்ரீதர், (01.12.2019 முதல் நடப்பு வரை)
11	மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பெயர்	1.திருமதி. நா. ஈஸ்வரி (01.04.2018 முதல் 15.11.2019 வரை) | 2. திருமதி. மு.குமுதம் (01.04.2019 முதல் | 15.11.2019 வரை) 3.திருமதி கேஜீபர்வதவர்த்தினி (16.11.2019 | முதல் 27.01.2020 வரை) 4. திரு. வி.சிவா (16.11.2019 முதல் நடப்பு வரை) 5. திரு.சி.ரீகன் (16.11.2019 முதல் நடப்பு வரை வரை) 6. திரு.மு.பொன்னுச்சாமி (01.02.2020 முதல் நடப்பு வரை), 7. திரு க. கண்ணன். (01.03.2020 முதல் நடப்பு வரை)
12	தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்)	திரு.நா.முனியராஜ்-தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) நாள் 01.04.2019 முதல் நடப்பு வரை
13	துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கையாளர் பெயர், விபரம்) (01.04.2019 முதல் 31.03.2020 வரை பணியாற்றியவர்கள்)	1.திரு.மு.தென்னரசு- துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) (01.04.2019 முதல் 14.02.2020 வரை) 2.திருமதி. த. மாணிக்கவள்ளி- துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை)) (15.02.2020 முதல் 22.03.2020 வரை) 3.திரு.ம. தவம்-துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை)23.03.2020 முதல் நடப்பு வரை)

2.ஊராட்சிகளில் நடைபெற்ற கூட்ட விபரம்

வ.எண்	கூட்டம் நடைபெற்ற நாள்	சாதாரணம் - சிறப்பு கூட்டம்
1	27.05.2019	சாதாரணம்
2	12.06.2019	சாதாரணம்
3	10.07.2019	சாதாரணம்
4	14.08.2019	சாதாரணம்
5	19.09.2019	சாதாரணம்
6	10.10.2019	சாதாரணம்
7	05.11.2019	சாதாரணம்
8	25.11.2019	சாதாரணம்
9	06.12.2019	சாதாரணம்
10	03.01.2020	சாதாரணம்
11	06.01.2020	பதவி பிரமான கூட்டம்
12	11.01.2020	சிறப்பு கூட்டம்
13	11.02.2020	சாதாரணம்
14	14.02.2020	சிறப்பு கூட்டம்
15	13.03.2020	சாதாரணம்

3. வங்கிக் கணக்குகள் விபரம்.

வ.எண்	விபரம்	வங்கிக் கணக்கு எண்	வங்கியின் பெயர் ஊர்
1	ஊராட்சி நிதி	022601000008950	இந்தியன் ஒவர்சீஸ் வங்கி கானாடுகாத்தான்
2	தமிழ்நாடு மின்சார வாரியம்/ தநா.கு.வ.வாரியம்/மாவட்ட ஆட்சித் தலைவர்.	022601000008951	இந்தியன் ஒவர்சீஸ் வங்கி கானாடுகாத்தான்
3	திட்டநிதி	022601000008952	இந்தியன் ஒவர்சீஸ் வங்கி கானாடுகாத்தான்
4	தமிழ்நாடு தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டம்	6750	பாண்டியனன் கிராம வங்கி ஒ.சிறுவயல்
5	பசுமை வீடுகள்	022601000011894	இந்தியன் ஒவர்சீஸ் வங்கி கானாடுகாத்தான்
6	ஊதிய கணக்கு	022601000014949	இந்தியன் ஒவர்சீஸ் வங்கி கானாடுகாத்தான்

4. தணிக்கை காலத்தில் வசூல் விபரம்.

வ. எண்	வரி விபரம்	கேட்பு			வசூல்			நிலுவை		
		நிலுவை	நடப்பு	மொத்தம்	நிலுவை	நடப்பு	மொத்தம்	நிலுவை	நடப்பு	மொத்தம்
1	வீட்டுவரி	-	159190	159190	-	105370	105370	-	53820	53820
2	நூலக வரி	-	15919	15919	-	10537	10537	-	5382	5382
3	தொழில் வரி	3455	80145	83600	3455	84281	88036	-	-	-
4	தண்ணீர் வரி	89400	183600	213000	89400	120000	209400	-	63600	63600
5	தொழில் உரிமம் மற்றும் லைசென்ஸ் கட்டணம்	-	2710	2710	-	1820	1820	-	890	890
6	பல்வகை	-	-	-	-	-	-	-	-	-
7	2சி	-	-	-	-	-	-	-	-	-

5.ஊராட்சியின் பொது விபரங்கள்: குட்நீர் ஆதாரங்கள்

வ. எண்	விபரம்	எண்ணிக்கை	செயல் படுபவை	செயல் படாதவை	செயல்படாத காரணம்
1	கைபம்புகள்	23	13	10	பழுது
2	விசைப்பம்புகள்	10	10	0	
3	மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள்	10	10	0	
4	மினிசிசைப்பம்பு	32	28	4	பழுது
5	பொதுக் குழாய்கள்				

6.தெருவிளக்குகள் எண்ணிக்கை:

1	பகுழல்விளக்குகள்	0
2	எல்இடி விளக்குகள்	152
3	சி.எப்.எல. விளக்குகள்	77
4	ஹைமாஸ் விளக்குகள்	1
5	இதர வகை	0
	மொத்தம்	230

7.தொலைக்காட்சிகள் எண்ணிக்கை :

1	கருப்பு வெள்ளை	0
2	வண்ண தொலைக்காட்சி	0

8.வீட்டுகுழாய் இணைப்புகள் ஒழுங்கு செய்தல்:

1	ஊராட்சியில் உள்ள மொத்த வீட்டுக்குழாய் இணைப்பு	405
2	தமிழ்நாடு கு.வ.வாரியம் அமைத்த இணைப்புகளின் எண்ணிக்கை	0
3	டெப்பாசிட் ரூ.2000/- பெறப்பட்ட இணைப்புகளின் எண்ணிக்கை	0
4	மாதம் ரூ.60/-வீதம் வசூலிக்கப்பட்ட இணைப்புகளின் எண்ணிக்கை	405

9.தண்ணீர் வரி:

வ. எண்	விபரம்	நிலுவை	நடப்பு	மொத்தம்
1	கேட்பு	89400	183600	273000
2	வசூல்	89400	120000	209400
3	நிலுவை	0	63600	63600

10.ஊராட்சியில் செய்யப்பட்ட வேலைகளின் விபரம்:

வ. எண்	விபரம்	எடுத்த வேலைகள்	முடித்த வேலைகள்	நிலுவை	விபரம்
1	ஊராட்சி நிதி	-	-	-	-
2	தமிழ்நாடு மின்சார வாரியம் த.நா.கு.வ.வாரியம்- மாவட்ட ஆட்சித் தலைவர்	-	-	-	-
3	திட்ட நிதி	-	-	-	-
4	தமிழ்நாடு தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டம்-05	-	-	-	-

11.ஊராட்சியில் செய்யப்பட்ட வேலைகளின் விபரம்:

வ. எண்	ஊராட்சியில் உள்ளடக்கிய கிராமங்களின் பெயர்கள்
1	சூரக்குடி
2	சொக்கம்பட்டி
3	பூவாண்டிபட்டி
4	நங்கம்பட்டி
5	நெற்புகபட்டி
6	மாலையிட்டான்பட்டி
7	திருவேலன்குடி
8	ஆவடைபொய்கை

12.ஊராட்சியில் உள்ள மொத்த வார்டுகளின் எண்ணிக்கை : 9

13. ஊராட்சியின் பரப்பளவு :

14. மொத்த வீடுகளின் எண்ணிக்கை : 1452

15ஊராட்சியின் மக்கட்தொகை :

	ஆண்	பெண்	மொத்தம்
மொத்தம்	2345	2327	4672

16. ஊராட்சியில் அஞ்சலகம் அமைந்துள்ள இடம் : சொக்கலிங்கம் புதூர்

17. ஊராட்சியல் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் விபரம்

வ. எண்	விபரம்	பெயர்	ஊதியம்
1	ஊராட்சி செயலர்	ஆர்எம். பவதாரணி	21288
2	மேல்நிலை தொட்டி இயக்குநர்	ஏ.கஸ்பார்	3600
		பி.ஆர்.அழகு	3600
3	துப்புரவு பணியாளர்	வீரன்	3600
		வீ.மீனாட்சி	3600

சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

தி.சூரக்குடி ஊராட்சி

கலராட்சி நிதிக் கணக்கு- கணக்கு எண்.1

2019-20ம் ஆண்டு தணிக்கை அறிக்கை

வரவு	தொகை	செலவு	தொகை
வீட்டு வரி	105370	ஊதியம்	69000
நூலக வரி	10537	பயணப்படி மற்றும் அமர்வுப்படி	6000
தொழில் வரி	88036	விசைபம்பு பராமரிப்பு	148036
தண்ணீர் கட்டணம்	209400	தெருவிளக்குப் பராமரிப்பு	50200
இதர வரவினம்	11000	பாலம் பராமரிப்பு	1800
தொழில் உரிமம்	1620	கட்டிட பராமரிப்பு	2600
ஏலம்	3400	தெருக்குழாய் உதிரி பாகம்	202484
மாநில நிதிக்குழு மானியம்	1692960	பைப்லைன் பராமரிப்பு	355785
14ம் நித்க்குழு மானியம்	19445	பொதுசுகாதாரம் கூலி	235149
டெ.செட்யூல்ட்	3744	இதர செலவு	89146
வரைபட அனுமதி	663801	மினி OHT உதிரி பாகம், பராமரிப்பு	157092
மரவரி	12	இதர மூலதன செலவு	355292
வங்கிவட்டி	71428	OHT உதிரி பாகம்	138320
டென்டர் டெபாசட்	5900	எழுதுபொருள் செலவினம்	26390
மனை மறு வரைமுறை கட்டணம்	1005006	அங்கிகரிக்கப்பட்ட திருவிழா செலவினம்	3600
சமுதாயகூடம் வாடகை	5750	தெருவிளக்கு உதிரி பாகம்	246279
LWF	7060	சாலை பராமரிப்பு	132056
GST	75554	குளங்கள் பராமரிப்பு	54906
IT	4709	தரைமட்ட தொட்டி பராமரிப்பு	20975
SD	16245	சுடுகாடு பராமரிப்பு	7300
ஆழ்துளை கிணறு கட்டணம்	200	புதிய மோட்டர் பொருதிதியது	202695
குடிநீர் இணைப்பு வைப்புத்தொகை	4000	பைப்லையன் விஸ்தரிப்பு	59476
		இயற்கை இடர்பாடுகள்	4500
		நூலக வரி செலுத்தியது	15919
		டென்டர் டெபாசிட் திரும்ப வழங்கியது	3730
		ஈமக்கிரிகை வழங்கியது	5000
		விளம்பர செலவினம்	65500
		குளியல்த்தொட்டி மோட்டர் பராமரிப்பு	4000
		அடிபம்பு பராமரிப்பு, உதிரி பாகம்	84500
		VPDP கட்டிடம் ஒயரிங் உதிரி பாகம்பொருதிதியது	96644
		சமுதாயகூடம் ஒயரிங் உதிரி பாகம்	195274
		நிதிமாற்றம்	280025
		GST திரும்ப வழங்கியது	18220
		வங்கி கமிஷன்	516.26
		ஆழ்துளை கிணறு, திறந்தவெளி கிணறு அகற்றுதல்	222427
மொத்தம்	4005177.00	**மொத்தம்**	3560836.26
ஆரம்ப இருப்பு (01.04.2019)	1795256.30	**இறுதியிருப்பு (31.03.2020)**	2239597.04
ஆக மொத்தம்	5800433.30	**ஆக மொத்தம்**	5800433.30

வரவு செலவு அறிக்கை சுருக்கம்

ஆரம்ப இருப்பு	1795256.30
வரவு	4005177.00
மொத்தம்	5800433.00
செலவு	3560836.26
இறுதியிருப்பு	2239597.04

ஊராட்சி நிதிக்கணக்கு எண். 2
தமிழ்நாடு மின்சார வாரியம்/தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்/ மாவட்ட ஆட்சியர் நிதிக்கணக்கு
2019-20ம் ஆண்டு வரவு செலவு அறிக்கை

வரவு	தொகை	செலவு	தொகை
மாநில நிதிக் குழு மான்யம்	650000	மின் கட்டணம்	842112
வட்டி வரவு	32226		
இதர வரவினம்	100		
14 வது நிதிக் குழு மான்யம்	150000		
மொத்தம்	832326.00	மொத்தம்	842112.00
ஆரம்ப இருப்பு	1028142.90	இறுதியிருப்பு	1018356.90
பெரு மொத்தம்	1860468.90	பெரு மொத்தம்	1860468.90

வரவு செலவு அறிக்கை சுருக்கம்

ஆரம்ப இருப்பு	1028142.90
வரவு	832326.00
மொத்தம்	1860468.90
செலவு	842112.00
இறுதியிருப்பு	1018356.90

திட்ட நிதிக்கணக்கு 2019-20 - ஆண்டு வரவு செலவு அறிக்கை.3

வரவு	தொகை	செலவு	தொகை
LWF	1793	GST திரும்ப வழங்கியது	56210.00
வங்கிவட்டி	91097	வைப்புத்தொகை	40582.00
GST	8929	குடிமராமத்து செலவு	178578.00
குடிமராமத்து வரவு	160648	வங்கி கமிஷன்	41.30
Laboar	17859		
மொத்தம்	280326.00	மொத்தம்	275411.30
ஆரம்ப இருப்பு (01.04.2019)	2492979.98	இறுதியிருப்பு (31.03.2020)	2497894.68
பெரு மொத்தம்	2773305.98	பெரு மொத்தம்	2773305.98

வரவு செலவு அறிக்கை சுருக்கம்

ஆரம்ப இருப்பு	2492979.98
வரவு	280326.00
மொத்தம்	2773305.98
செலவு	275411.30
இறுதியிருப்பு	2497894.68

ஊராட்சி நிதிக்கணக்கு எண். 5.
கலைஞர் விடு வழங்கும் திட்டம் ஆண்டு வரவு செலவு அறிக்கை
2018-19 -ஆண்டு தணிக்கை அறிக்கை

வரவு	தொகை	செலவு	தொகை
மொத்தம்	--	மொத்தம்	--
ஆரம்ப இருப்பு	--	இறுதியிருப்பு	--
பெரு மொத்தம்	--	பெரு மொத்தம்	--

வரவு செலவு அறிக்கை சுருக்கம்

ஆரம்ப இருப்பு	--
வரவு	--
மொத்தம்	--
செலவு	--
இறுதியிருப்பு	--

ஊராட்சி நிதிக்கணக்கு எண். 6
பசுமை வீடுகள்
2019-20 -ஆண்டு தணிக்கை அறிக்கை

வரவு	தொகை	செலவு	தொகை
பசுமை வீடுகள் திட்ட நிதி வரவு	--	பசுமை வீடு பயனாளிக்கு வழங்கியது	--
வங்கி வட்டி	--	வட்டித்தொகை திட்டஇயக்குனருக்கு வழங்கியது	--
டாக்குமென்டரி சார்ஸ்	--	இறுதி இருப்பு திட்ட இயக்குனருக்கு வழங்கியது	--
கம்பி பிடித்தம்	--		--
மொத்தம்	--	மொத்தம்	--
ஆரம்ப இருப்பு	--	இறுதியிருப்பு	--
பெரு மொத்தம்	--	பெரு மொத்தம்	--

<u>வரவு செலவு அறிக்கை சுருக்கம்</u>

ஆரம்ப இருப்பு	--
வரவு	--
மொத்தம்	--
செலவு	--
இறுதியிருப்பு	--

ஊராட்சி நிதிக்கணக்கு எண். 7
ஊதிய வீடுகள்
2019-20 -ஆண்டு தணிக்கை அறிக்கை

வரவு	தொகை	செலவு	தொகை
மாநில நிதிக்குழு மானியம்	315840.00	ஊதியம்	366270.00
குழுமக்காப்பீடு பிடித்த வரவு	3000.00	முன்பணம் வரவு	10000.00
வட்டி வரவு	3224.00	மருத்துவக் காப்பீடு செலுத்தியது	5096.00
மருத்துவ காப்பீடு பிடித்தம்	2160.00	ஊதியம் உயர்வு நிலுவை	14846.00
தி.மு. பிடித்தம்	300		
மொத்தம்	327224.00	மொத்தம்	396212.00
ஆரம்ப இருப்பு	111261.65	இறுதியிருப்பு	42273.65
பெரு மொத்தம்	438485.65	பெரு மொத்தம்	438485.65

<u>வரவு செலவு அறிக்கை சுருக்கம்</u>

ஆரம்ப இருப்பு	111261.65
வரவு	327224.00
மொத்தம்	438485.65
செலவு	396212.00
இறுதியிருப்பு	42273.65

ஊராட்சி நிதிக்கணக்கு எண். 8
திடகழிவு மேலாண்மை
2019-20 -ஆண்டு தணிக்கை அறிக்கை

வரவு	தொகை	செலவு	தொகை
ஊதியம்	156000.00	ஊதியம்	13000.00
வங்கி வட்டி	519.00	வங்கி கமிஷன்	42.00
மொத்தம்	156519.00	மொத்தம்	130042.00
ஆரம்ப இருப்பு (01.04.2019)	15575.00	இறுதியிருப்பு (31.03.2020)	42052.00
பெரு மொத்தம்	172094.00	பெரு மொத்தம்	172094.00

வரவு செலவு அறிக்கை சுருக்கம்

ஆரம்ப இருப்பு	15575.00
வரவு	156519.00
மொத்தம்	172094.00
செலவு	130042.00
இறுதியிருப்பு	42052.00

சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

தி.சூரக்குடி ஊராட்சி

2019 - 2020 ஆம் ஆண்டு அனைத்து நிதிக்கணக்கு அறிக்கை

பத்தி எண். :1

வீட்டு வரி வசூல் - 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் அமுல்படுத்ததால் வருவாய் குறைவு- குறைபாடு.

2019-2020 ஆம் ஆண்டு வீட்டுவரி கேட்புத் தொகையில் ரூ. 88600/- வசூல் செய்யப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண். 255 ஊரக வளர்ச்சித் துறை நாள் 13.12.1999 மற்றும்1994 ஊராட்சி சட்டப்பிரிவு 172 (1)அட்டவணை 1ன்படி வீட்டு வரியானது மூலதன அடிப்படை, வருடாந்திர அடிப்படை அல்லது கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்ட கட்டிடத்தின் பரப்பின் அடிப்படையில் வீட்டு வரி நிர்ணம் செய்யப்பட வேண்டும்.

கட்டிடத்தின் வகைப்பாடு		நிர்ணயம் செய்யப்பட வேண்டிய விபரம்
கான்கிரிட் வீடுகள் மற்றும் தார்ஸ் தளமிட்ட வீடுகள் மாடி வீடுகள்	கட்டிடப் பரப்பில் 9.29 சதுர டெசி மிட்டருக்கு/ சதுர அடிக்கு	ரூ. 0.50 பைசா முதல் 1.00 வரை
ஓடு வேயப்பட்ட வீடுகள்	கட்டிடப் பரப்பில் 9.29 சதுர டெசி மிட்டருக்கு/ சதுர அடிக்கு	ரூ. 0.30 பைசா முதல் 0.60 வரை
கூரை வேயப்பட்ட வீடுகள்	கட்டிடப் பரப்பில் 9.29 சதுர டெசி மிட்டருக்கு/ சதுர அடிக்கு	ரூ. 0.20 பைசா முதல் 0.40 வரை

மேலும் சாதாரண வணிகம் போன்ற சிறுகடைகளுக்கு 20 சதவீதம் மேல்வரியும், வியாபரா நிறுவனம், திரையரங்கம், குடியிருப்பு விடுதிகள், ஆகியவற்றிற்கு 60 சதவீதம் மேல் வரியும் நிர்ணயம் செய்யப்பட்டு, வீட்டுவரி வசூல் செய்யப்பட வேண்டும். ஆனால் இந்நடை முறை பின்பற்றப்படாததால், வீட்டுவரி தலைப்பில் வரவு மிகவும் குறைவாக உள்ளது. ஊராட்சிக்கு நிதியிழப்பு ஆகும். எனவே வீட்டு வரி நிர்ணயம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

பத்தி எண். : 2

2019 - 2020 ஆம் ஆண்டு நூலக வரி ரூ.8860/- செலுத்தப்படாதது - குறைபாடு.

தணிக்கையாண்டில் இவ்வூராட்சிக்கு நூலகவரியாக ரூ.8860/- ஊராட்சி கணக்கில் வரவாகியுள்ளது. இத்தொகை மாவட்ட நூலக ஆவணக்குழுவுக்கு உரியதாகும் தணிக்கையாண்டில் வசூலான நூலக வரி ரூ. 8860 /- மாவட்ட நூலக ஆணையக் குழுவிற்கு செலுத்தப்படவில்லை. எனவே உடன் உரிய தலைப்பில் செலுத்தி சலான் நகல் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண்.:3

தொழில் உரிமம் (D & O Trade) பதிவேடு தணிக்கைக்கு காண்பிக்கப்படாதது குறைபாடு.

இவ்வூராட்சியல் தொழில் உரிமம் பதிவேடு காண்பிக்கப்படவில்லை. ஆனால் தணிக்கையாண்டில் வசூல் செய்யப்படவில்லை. தொழில் உரிமக்கட்டணம் வசூல் தணிக்கையில் மிகவும் குறைவாக கருதப்படுகிறது. தொழில் நிறுவனங்கள் மற்றும் கடைகள் பதிவேட்டில் முறையாக பதிவு செய்து கேட்பு நிர்ணயம் செய்து வசூல் செய்து தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண் : 4

தொழில் வரி ரூ.33335/- வருமானம் விபரங்கள் காண்பிக்கபடவில்லை - குறைபாடு.

தணிக்கையாண்டில் இவ்வூராட்சிக்கு தொழில் வரி கேட்பு மற்றும் நிலுவைத் தொகை (கேட்பு ரூ.33335/- மட்டும் வசூல் செய்யப்பட்டுள்ளது. தொழில்வரி வசூலின் சரித்தன்மை அறிய வருமான விபர அறிக்கைகள் தணிக்கைக்கு காண்பிக்கப்படவில்லை. 1994ஆம் ஆண்டு தொழில்வரி சட்டப்படி ஊராட்சி பதிவில் உள்ள அனைத்து மத்திய, மாநில நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் வணிகர்கள் மற்றும் இதர நிறுவனங்கள் விபரங்கள் பணியாளர்கள் விபரங்கள் அடங்கிய முதன்மை பதிவேடு தயார் செய்து சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் அலுவலகங்களில் பணம் பெற்றுத் தரும் அலுவலர்களிடமிருந்து ஊதியம் பெறும் விபர அறிக்கை பெறப்பட்டு அதனடிப்படையில் தொழில் வரி விதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

பத்தி எண் : 5

பணிப்பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படாதது – குறைபாடு

இவ்வூராட்சியில் பணிபுரியும் ஊராட்சி செயலர் முதலான பணியாளர்களுக்கு பணிப்பதிவேடு பேணப்படாமல் உள்ளது. உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிப்பதிவேடு பேணப்பட்டு பணி விபரங்கள் முழுமையாக பதிவு செய்யப்பட்டு பதிவுகள் சரிபார்க்கப்பட்டு சான்றொப்பம் பெறப்படவேண்டும். மேல்நிலை நீர்த்தொட்டி இயக்குபவர்களுக்கு பணிச்சுருள் பேணப்படவில்லை. உரிய விபரங்களுடன் பணிச்சுருள் பேணப்பட்டு தணிக்கைக்கு காண்பிக்கப்படல் வேண்டும்.

பத்தி எண். :6

நிதி நிலை அறிக்கை கிராமசபை ஒப்புதல் பெறப்படாதது - குறைபாடு

2019-20 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை (படிவம் 31) கிராமசபை மற்றும் ஊராட்சி தீர்மானத்தில் வைத்து அங்கீகாரம் பெற்று அதன் விபரம் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண்.:7

காசோலை அடிக்கட்டை (Cheque Counter Foils) தணிக்கைக்கு காணபிக்கப்படாதது - குறைபாடு

இவ்வூராட்சியில் செயல்படுத்தப்படும் ஊராட்சி நிதி, வரையறுக்கப்பட்ட நிதி, திட்ட நிதி ஆகியவற்றின் செயல்பாடுகளுக்கான செலவினங்கள் வங்கி கணக்குகளில் காசோலை வழி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வழங்கப்பட்ட காசோலைகளின் அடிக்கட்டை (Cheque Counter Foils) தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும். இதனால் வழங்கப்பட்ட காசோலைகளின் சரித்தன்மை வழங்கப்பட்ட நாள், பணியாளருக்கு காசோலை வழங்கப்பட்ட விபரம் ஆகியவைகளை தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை. எனவே காசோலைகளின் அடிக்கட்டைகள் தணிக்கைக்கு காண்பிக்கப்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

பத்தி எண். :8

குழுமக்காப்பீடு ஊராட்சிப் பணியாளர்களுக்கு செலுத்தப்படாதது - குறைபாடு.

அரசு ஆணை எண். 747/ நிதி (ஓய்வூதியம், நாள் 31.03.1998ன்படி) ஊராட்சியில் பணிபுரியும் உள்ளாட்சி பணியாளர்களுக்கு குழுமக்காப்பீட்டுச் சந்தா ரூ. 30/- மற்றும் ஊராட்சி பங்குத் தொகை ரூ. 55/-. சேர்த்து அரசு நிதியில் உரிய தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். ஆனால் இவ்வூராட்சியில் உள்ளாட்சிப் பணியாளர்களுக்கு குழுமக் காப்பீட்டு சந்தா மற்றும் பங்குத் தொகை ஆகியன தணிக்கைக் காலத்தில் அரசு தலைப்பில் செலுத்தப்படவில்லை.

01.04.2019 முதல் 31.03.2020 வரை குழுமக்காப்பீடு மற்றும் ஊராட்சி சந்தாத் தொகை உடனடியாக அரசுத் தலைப்பில் செலுத்தப்பட்டு தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண். :9

தெருவிளக்கு பராமரிப்பு - கூடுதல் செலவினம் ரூ. 104620/- - குறைபாடு.

தணிக்கையாண்டில் இவ்வூராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பிற்கு ரூ. 104620/- செலவிடப்பட்டுள்ளது. ஆனால் அரசு ஆணை எண். 223 ஊரக வளர்ச்சித் துறை நாள் : 19.02:1994ன்படி ஒரு தெருவிளக்கிற்கு ரூ. 300/- வீதம் ஓராண்டுக்கு பராமரிப்புச் செலவினமாக மேற்கொள்லாமென உள்ளது. ஆனால் இவ்வூராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பிற்கு (172 X 300 = ரூ.51,600/-) ரூ.1420/- கூடுதல் செலவினம். மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மேலும் படிவம் 17 மற்றும் படிவம் 18 முறையாக பராமரிக்கப்படவில்லை. எனவே பராமரிப்பு பணி செய்த விபரம் தணிக்கையில் அறிய இயலவில்லை. கூடுதல் செலவினம் தணிக்கைக்கு உட்படுத்தப்படுகிறது. இச்செலவினத்திற்கு உரிய விபரம் வழங்க வேண்டும்.

பத்தி எண். :10

விசைப்பம்பு பராமரிப்பு - கூடுதல் செலவினம் - ரூ.190600/- - குறைபாடு.

தணிக்கையாண்டில் இவ்வூராட்சியில் விசைப்பம்பு பராமரிப்பிற்கு ரூ.190600/- செலவிடப்பட்டுள்ளது. ஆனால் ஆரசு ஆணை (நிலை) அ எண். 64 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் : 20.06.2006ன்படி ஒரு ,விசைப்பம்பிற்கு ரூ. 7,500/-, கைப்பம்பிற்கு ரூ. 600/- வீதம் ஓராண்டுக்கு பராமதிப்புச் செலவினமாக மேற்கொள்லாமென உள்ளது. ஆனால் இவ்வூராட்சியில் பின்வரும் விபரப்படி பராமரிப்பிற்கு கூடுதல் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ரூ. 5,000/-க்கு மேற்பட்ட செலவினத்திற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்படவில்லை.

மேலும் படிவம் 17 மற்றும் படிவம் 18 முறையாக பராமரிக்கப்படவில்லை. எனவே பராமரிப்பு பணி செய்த விபரம் தணிக்கையில் அறிய இயலவில்லை. கூடுதல் செலவினம் தணிக்கைக்கு உட்படுத்தப்படுகிறது. இச்செலவினத்திற்கு உரிய விபரம் வழங்க வேண்டும்.

பத்தி எண். : 11

வரைபட அனுமதி பதிவேடு மற்றும் மனையிட பிரிவு பதிவேடு பராமரிக்கப்படாதது -குறைபாடு

தணிக்கையாண்டில் இவ்வூராட்சியில் வரைபட அனுமதிக்கட்டணம் மற்றும் மனையிட அனுமதி கட்டணம் ரூ. 144131 / வசூல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அரசு ஆணை எண். 255 ஊ.வது (சி2) நாள் 31.12.1999-ல் குறிப்பிடப்பட்டுள்ள படி அனுமதி கோரப்பட்ட வரைபடங்களுக்கு சதுர மீட்டர் அடிப்படையில் கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளதா? சதுர மீட்டருக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை விபரத்திற்கு ஊராட்சி தீர்மானம் காணர்பிக்கப்படாததால் பெறப்பட்ட கட்டணம் சரிதானா? என தணிக்கையில் அறியமுடியவில்லை. மேலும் மனைபிரிவு வழங்கப்பட்டதற்குரிய பதிவேடுகள் தணிக்கைக்கு காணர்பிக்கப்படவில்லை.

பத்தி எண். : 12

பைப்லைன் பராமரிப்பு செலவினம் - ரூ. 63740/-குறைபாடு.

தணிக்கையாண்டில் ஊராட்சியில் கீழ்க்கண்டவாறு பைப்லைன் பராமரிப்பு பணி மேற்கொண்டமைக்கு ரூ. 63740/- செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ரூ. 5,000/-க்கு மேற்பட்ட பணிகள் அனைத்தும் ஒளிவு மறைவு இல்லாத ஒப்பந்தச்சட்டம் 49, 1998 மற்றும் அரசாணை எண் 446, நிதித்துறை 28 ஊரக வளர்ச்சித்துறை நாள்: 31.12.1998 ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியினை செயல்படுத்தப் படவில்லை.

ஒரு நிதியாண்டில் ரூ. 5,000- வரை மதிப்பீடு இன்றி செலவு செய்து கொள்ளலாம். ஆனால் மேற்காணும் கூடுதல் செலவினத்திற்கு அனுமதி மற்றும் மதிப்பீடு இல்லை.

பைப்லைன் பழுது குறித்த விபரம் இல்லை. பழுது புகார் பதிவேடு காண்பிக்கப்படவில்லை. பணி செய்தமைக்கு புகைப்படம் இல்லை. தொழில்நுட்ப அனுமதி பெறப்படவில்லை. மேலும் தொகை வழங்கியமைக்கு ஒப்புதல்

பெறப்படவில்லை. எனவே மேற்காணும் செலவினம் தணிக்கைக்கு உட்படுத்தப்படுகிறது. இச்செலவினத்திற்கு உரிய விபரம் வழங்க வேண்டும்.

பத்தி எண். :13

பொது சுகாதாரம் மற்றும் இதர செலவு - குறைபாடு.

தணிக்கையாண்டில் இதர செலவினம் மற்றும் பொது சுகாதாரம் ஆகிய தலைப்புகளில் கீழ் ரூ.210023/-க்கு செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிதியாண்டில் ரூ.5,000/-ம் வரை மதிப்பீடு இன்றி பணிகள் மேற்கொள்ளலாம். ஆனால் ஊராட்சியில் ரூ.5,000/-க்கு மேற்பட்டு இதர செலவினம் மற்றும் பொது சுகாதாரம் மதிப்பீடு இல்லை, முன் அனுமதி ஏதும் பெறப்படவில்லை. எனவே செலவினம் தணிக்கைக்கு உட்படுத்தப்படுகிறது.

பத்தி எண். :14

ஒப்பந்ததாரர் புதுப்பித்தல் கட்டணம் முறையாக வசூல் செய்யப்படாதது - குறைபாடு.

ஊராட்சியில் பணிகள் மேற்கொள்ள பதிவு செய்யப்படும் ஒப்பந்ததாரர் ஆண்டுதோறும் புதுப்பித்தல் கட்டணம் ரூ.1000/- வசூலிக்கப்பட வேண்டும். தணிக்கையாண்டில் இவ்வூராட்சியில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களிடம் வசூல் செய்யப்படவில்லை. எனவே உரிய ஒப்பந்ததாரர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டு அதன் விபரம் தணிக்கைக்கு, காண்பிக்கப்படவேண்டும். மேலும் ஒப்பந்ததாரர் பதிவேடு முறையாக பராமரிக்கப்பட்டு தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண் : 15

மீன்பாசி ஏலம் நடத்தப்படாதது -- குறைபாடு

தணிக்கையாண்டில் இவ்வூராட்சியில் மீன் பாசி ஏலம் நடத்தப்படவில்லை. அரசு ஆணை எண்.189 நாள் 16.08.1999ன்படி ஊராட்சியிலுள்ள நீர்நிலைகளில் மீன் பிடிப்பதற்கான ஏலத்தை ஊராட்சி நிர்வாகம் நடத்தி ஏலத் தொகையினை ஊராட்சி நிதியில் வரவு வைக்கப்படவேண்டும். தணிக்கையாண்டில் இத்தலைப்பின்கீழ் தொகை ஏதும் வரப்பெறவில்லை. இது ஊராட்சிக்கு நிதியிழப்பாக கருதப்படுகிறது. எனவே ஏலம் நடத்தப்படாததற்கான உரிய விளக்கத்தினை தணிக்கைக்கு தெரிவிக்கப்பட வேணடும்.

பத்தி எண் : 16

கழிவுப் பொருட்கள் ஏலம் விடப்படாதது - குறைபாடு

தணிக்கையாண்டில் இவ்வூராட்சியில் கழிவுப்பொருட்கள் ஏலம் விடப்படவில்லை. அரசு ஆணை என். 169 ஊ.வ.து நாள் 16.08.1999ன்படி ஊராட்சியிலுள்ள கழிவுகளை ஏலம் விட்டு நிர்வாகம் நடத்தி ஏலத் தொகையினை ஊராட்சி நிதியில் வரவு வைக்கப்படவேண்டும். ததணிக்கையாண்டில் இத்தலைப்பின்கீழ் தொகை ஏதும் வரப்பெறவில்லை. இது ஊராட்சிக்கு நிதியிழப்பாக கருதப்படுகிறது. மேலும் பதிவேடு 21ல் உள்ள இருப்பு கழிவுப்பொருட்களை உதவி பொறியாளர் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு ஏலம் நடத்தி உடன் வரவு வைத்து தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண். :17

பதிவேடுகள் பேணப்படாதது - குறைபாடு.

இந்த ஊராட்சியில் தணிக்கையாண்டில் கீழ்க்கண்ட பதிவேடுகள் காண்பிக்கப்படவில்லை.

6. கட்டிட வரைபட அனுமதி பதிவேடு
7. வைப்புத் தொகை பதிவேடு
8. மின் கட்டணப்பதிவேடு
9. ஒப்பந்ததாரர் பதிவேடு
10. டெண்டர் பதிவேடு

மேலும் 1, 16, 22, 24, 27 மற்றும் 31 (Budget) பராமரிக்கப்படவில்லை. படிவம் 13 பதிவுகள் ரொக்கப்புத்தகப்படி இணக்கம் இல்லை. படிவம் 17, 18 முழுமையாக எழுதப்படவில்லை. பராமரித்து தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண் : 18

தணிக்கையாண்டில் இவ்வூராட்சியில் கீழ்கண்ட விபரப்படி மாநில அரசிடமிருந்து வரப்பெற்ற மானிய விபரங்களுக்கான உரிய செயல்முறை ஆணைகள் தணிக்கைக்கு காணர்பிக்கப்படவில்லை.

பத்தி எண் : 19

ஊராட்சியில் தெரு விளக்கு குடிநீர் மற்றும் அரசு கட்டிடங்களுக்கு மின் கட்டண கேட்புகுரிய கட்டண அட்டை பெறப்பட்டு தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும். மேலும் நிலுவையின்றி மின் கட்டணம் செலுத்த வேணடும்.

பத்தி எண். : 20

தணிக்கையாண்டில் ஊராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்ட வீடுகள், பசுமை வீடுகள் திட்ட வீடுகள் அனைத்தும் முடிக்கப்பட வேண்டும். மேலும் ஊரக வீடு வழங்கும் திட்ட வீடுகள் நிலுவையில் உள்ளவற்றை உடனடியாக முடிக்கப்பட வேண்டும். வீடுகள் இறுதிப்பட்டியல் அனுமதிக்கப்பட்ட விபரம் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண் : 21

தணிக்கையாண்டில் ஊராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பசுமை வீடுகள் திட்ட வீடுகள் அனைத்தும் முடிக்கப்பட வேண்டும். வீடுகள் இறுதிப்பட்டியல் அனுமதிக்கப்பட்ட விபரம் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

பத்தி எண் : 22

நிதியாண்டின் இறுதியில் வங்கிகள் இறுதி இருப்பு உறுதி செய்யப்பட்டு சான்றிதழ் பெறப்பட்டு தணிக்கைக்கு காண்பிக்கப்படாது - குறைபாடு.

தணிக்கையாண்டில் இவ்வூராட்சியில் செயல்படுத்தப்படும் அனைத்து நிதி கணக்குகளுக்கும், கணக்கு பேணப்பட்டுவரும் வங்கி மேலாளரிடமிருந்து 31.03.2020க்கான இறுதி இருப்பு இணக்கச்சான்று பெற்று தணிக்கைக்கு காண்பிக்கப்படவில்லை. இதனால் இறுதி இருப்பின் சரித்தன்மையை உறுதி செய்ய இயலவில்லை. எனவே உரிய இறுதி இருப்பு சான்று பெற்று தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

துணை வட்டார ஊராச்சி அலுவலர்,(தணிக்கை),
சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

பெறுநர் :-
தலைவர்,
தி.சூரக்குடி ஊராட்சி.

நகல் :-
1. உதவி இயக்குநர் (தணிக்கை) சிவகங்கை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2.வட்டாரா வளர்ச்சி அலுவலர் (கி. ஊ),, சாக்கோட்டை

மாதிரி தணிக்கை அறிக்கை -2

திருவள்ளூர் மாவட்டம்

கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியம்

சுண்ணாம்புகுளம் ஊராட்சியின் 2019-20-ம் ஆண்டு கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை

1. தணிக்கையாளர் பெயர் மற்றும் பதவி : திரு.K.மகாதேவன்
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை)

2. தணிக்கை மேற்கொண்ட நாள் : .09.2020

3. தணிக்கைக்கான ஆதாரம் : 1) தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சிகளின் தணிக்கை அறிக்கைகளை வெளியிடுதல் மற்றும் முடிவு செய்தல்) விதிகள்-2000
2) அரசாணை (நிலை) எண்.59, ஊரக வளர்ச்சித்துறை நாள் : 07-03-2000

4. தணிக்கை காலத்தில் பொறுப்பு வகித்த தனி அலுவலர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்களின் விவரப்பட்டியல்

வ. எண்.	தலைவர்/அலுவலர் பெயர்	பதவி பெயர்	முதல்	முடிய
1.	திரு.கோ.சுவாமிநாதன்	தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)	01.04.2019	21.08.2019
2.	திரு.B.அருள்	தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)	22.08.2019	01.12.2019
3.	திரு.K.குலசேகரன்	தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)	02.12.2019	17.02.2020
4.	திரு.கோ.சுவாமிநாதன்	தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)	18.02.2020	04.03.2020
5.	திரு.B.பாலசுப்ரமணியம்	தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)	05.03.2020	31.03.2020
6.	திருமதி. B.அம்பிகா	தலைவர்	06.01.2020	31.03.2020
7.	திரு. கோபிநாத்	மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்	01.04.2019	28.11.2019
8.	திருமதி. சிவகாமி	மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்	28.11.2019	31.03.2020
9.	திரு.பிர்லா	ஊராட்சி செயலர்	01.04.2019	31.03.2020

<u>1) கிராம ஊராட்சியின் வரவு செலவுகள் தணிக்கை– கிராம சபை ஒப்புதல் பெறப்படவில்லை</u>

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 192,242 மற்றும் அ.ஆ.எண்.223/ஊரக வளர்ச்சித்துறை / நாள் 20.10.1999, அ.ஆ.எண்.(பல்வகை) 43,ஊ.வ.(C–4) துறை, நாள் 21.02.2000 ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் (கிராம ஊராட்சிகள் வரவு செலவு மற்றும் கணக்குகள் பராமரித்தல்) விதிகள், விதி எண்.57ன்படி கிராம ஊராட்சியின் வரவு செலவுகளுக்கு கிராம சபையின் ஒப்புதல் ஊராட்சிமன்ற ஒப்புதல் பெறப்பட வேண்டும். ஆனால் 2019–20–ம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கை இவ்வூராட்சியின் கிராம சபையின் ஒப்புதல் பெறப்படாமல் உள்ளது. எனவே கிராம சபையின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2) நிதி வாரியான வரவு, செலவு, இறுதி இருப்பு மற்றும் வங்கி இறுதி இருப்புகளில் இணக்கம் பற்றிய சான்றுரை

அ) இந்த ஊராட்சிகளில் பின்வரும் கணக்குகள் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. அக்கணக்குகளுக்கான ரொக்கப் புத்தகத்தின் படியான கடந்த ஆண்டு இறுதி இருப்புத் தொகையாகவும் தணிக்கையாண்டில் ஆரம்ப இருப்பாகக் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும் 31.03.2020 அன்றைய தேதியிலுள்ள இறுதி இருப்பு தொகை அதற்கென பேணப்பட்டு வரும் கருவூல வங்கிக் கணக்குகளின் இறுதி இருப்புடன் தரப்பட்ட வங்கி ஒத்திசைவு பட்டியல்படி இணக்கமாக உள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

ஆ) அனைத்து கணக்குகளின் ஆரம்ப இருப்பு, வரவு செலவு மற்றும் இறுதி இருப்பு விவரமும் மற்றும் வரவு செலவுகள் குறித்த விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வ. எ ண்.	கணக்கின் விவரம்	ஆரம்ப இருப்பு 01.04.19	வரவு	செலவு	முடிவிருப்பு ரொக்கப் புத்தகத்தின்படி 31.03.20
1.	கணக்கு எண்–I	125469.00	651883.00	733915.00	43437.79
2.	கணக்கு எண்–II	1459332.69	796385.00	1191215.00	1064502.69
3.	கணக்கு எண்–III	590126.92	14445.00	349024.00	255547.92
4.	கணக்கு எண்–V	715727.00	22871.00	223154.00	515444.00
5.	கணக்கு எண்–VII	60706.00	543631.00	469274.00	135063.58
6.	கணக்கு எண்–VIII	241.00	195310.00	195283.00	268.00
7.	கணக்கு எண்–IX	1080957.00	630960.00	-	1711917.00

3) வீட்டுவரி – வீட்டுவரி நிர்ணயம் செய்வது மற்றும் பதிவேடுகள் பராமரிப்பது – போதிய விவரங்கள் இல்லாமை – குறைபாடுகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 172 (1)–ன்படி கிராம ஊராட்சிகளில் உள்ள வீடுகளுக்கு வீட்டுவரி விதிக்கும் போது தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 அமுலுக்கு வருவதற்கு முன் என்ன நடைமுறை கடைபிடிக்கப்பட்டதோ அதே முறையிலோ அல்லது கிராம ஊராட்சிகளில் உள்ள வீடுகள் வகைப்படுத்தப்பட்டு அந்த வகைப்பாடுகளுக்கு ஏற்ப தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 அட்டவணை–1ல் தரப்பட்டுள்ளவாறு அனைத்து வீடுகளுக்கு கட்டிடம் பரப்பு (Plinth Area) அடிப்படையில் அரையாண்டு/முழு ஆண்டு வரி கணக்கிடப்பட்டு வசூலிக்கப்பட வேண்டும்.

கட்டிடப் பரப்பின் அடிப்படையில் வரிவிதிக்கப்பட்டால் சிறிய வியாபார நிறுவனம் உள்ள இடமாக இருந்தால் நிர்ணயிக்கப்படும் வீட்டுவரியில் 20 சதவிகிதம் மேல்வரியாகவும் பெரிய நிறுவனங்கள், திரையரங்குகள் மற்றும் தங்கும் விடுதிகள் போன்றவைகளுக்கு விதிக்கப்பட்ட வீட்டுவரியில் 60 சதவிகிதம் மேல்வரியாகவும் கூடுதலாக விதிக்கப்பட்டு வீட்டுவரி நிர்ணயிக்கப்பட வேண்டும்.

ஆனால் இவ்வூராட்சியின் வீட்டுவரி நிலுவை மற்றும் நடப்பு கேட்பு பதிவேட்டில் கட்டிட பரப்பு விவரம் எழுதப்படவில்லை. கட்டிட உரிமக்கட்டணம் பதிவேடும் வீட்டுவரி நிர்ணய செய்ததை தணிக்கையில் சரிபார்க்க இயலவில்லை.

எனவே வீட்டுவரி பதிவேடுகளை முறையாக பாராமரித்துத் தணிக்கைக்கு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) நூலக வரி – தணிக்கையாண்டில் வசூலித்த நூலக வரி திருவள்ளுர் மாவட்ட நூலக ஆணை குழுவிற்கு செலுத்தப்பட வில்லை – ரூ.3072/–

தணிக்கையாண்டின் முடிவில் இவ்வூராட்சியின் ஆண்டுக் கணக்கின்படி வசூலிக்கப்பட்ட நூலகத்தீர்வை ரூ.3072/- திருவள்ளுர் மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்கு செலுத்தப்படவில்லை. எனவே இத்தொகை உடன் செலுத்தி அதன் ஒப்புதல் இரசீது தணிக்கைக்கு காண்பிக்கப்படவேண்டும்.

5) மின் உதிரி மற்றும் குடிநீர், கழிவு பொருட்கள் படிவம் 21ல் பதிந்து ஏலம் விடுதல்

தணிக்கையாண்டில் உபயோகப்படுத்தப்பட்ட மின் உதிரி மற்றும் குடிநீர், கழிவு பொருட்கள் படிவம் 21ல் பதிந்து ஏலம் விட்டு அத்தொகையினை ஊராட்சி நிதி 1–ல் வரவு வைக்கப்படும் வரை தணிக்கை தடை வைக்கப்படுகிறது.

6) வரி மற்றும் கட்டணங்கள் 31.03.2020–ல் வசூலிக்கப்படாமல் நிலுவையாக உள்ளது. வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் – ரூ.25425/–

இவ்வூராட்சியில் தணிக்கையாண்டின் முடிவில் பின்வருமாறு வரி மற்றும் கட்டணங்கள் வசூலிக்கப்படாமல் நிலுவையாக உள்ளன. இதனை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.	வீட்டுவரி	=	ரு	22950
2.	நூலகத் தீர்வை	=	ரு	2295
	மொத்தம்	=	ரு	**25425**

7) சொத்துக்கள் பதிவேடு – கிராம ஊராட்சியின் சொத்துக்கள் பதிவேடு பாரமரிக்கப்பட வேண்டும்– குறைபாடுகள்.

அரசாணை எண்.92 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 26.03.1997–ன்படி கிராம ஊராட்சி சொத்துக்கள் பதிவேடு நிர்ணயிக்கப்பட்ட படிவம் 16 ல் பராமரிக்கப்பட வேண்டும் இப்பதிவேட்டில் கீழ்கண்ட சொத்துக்கள் பற்றி பதிந்து இவற்றின் பயன்பாடுகள் பற்றியும் அதன் வருமானம் பற்றியும் கிராம சபை ஆய்வு செய்யவேண்டும்.

1) கிராம ஊராட்சி அலுவலக வளாகம்.
2) சமுதாயக் கூடம்.
3) மனைப்பிரிவு அனுமதி வழங்கியதில் கிராம ஊராட்சிகளுக்கு நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 10%நிலங்கள்.
4) பொது விநியோக கடை கட்டிடம்.
5) ஒப்படைக்கப்பட்ட புறம்போக்குகள் (சட்டப்பிரிவு 1349135)
6) ஒதுக்கப்படாத வனப்பகுதிகள் (UnreservedForest).
7) கிராம நிர்வாக அலுவலகக் கட்டிடம்.
8) நீர்நிலைகள் (மச்ச மகசூல்)
9) பலன்தரும் மரங்கள்
10) கிராம ஊராட்சிக்கு சொந்தமான கனிமவளங்கள்.
11) கிராம ஊராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்கள்.

2019–20–ல் கிராம சபை ஆய்வு செய்த விவரம் தணிக்கைக்குச் தெரிவிக்கமா

8) கிராம ஊராட்சிகள் – வியாபார நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் விளம்பர பலகை அமைத்தது – விளம்பர வரி வசூலிக்கப்படாதது – நிதியிழப்பு குறைபாடு

அரசாணை எண். (நிலை) 218 ஊரக வளர்ச்சி துறை நாள். 10.1999-ன் படி கிராம ஊராட்சி பகுதிகளில் அமைக்கப்படும் விளம்பர பலகைகள் மற்றும் விளம்பரங்களுக்கு பின்வருமாறு விளம்பர வரி வசூல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

வ. எண்.	கிராம ஊராட்சி அமைந்துள்ள இடம்	குறைந்தபட்சம் ஒரு சதுர மீட்டருக்கு	அதிகபட்சம் ஒரு சதுர மீட்டருக்கு
1	மாநகராட்சி எல்லையிலிருந்து 30 கி.மீ பரப்பளவுக்கு உட்பட்ட கிராம ஊராட்சிகள்	ரூ.20/-	ரூ.250/-
2	நகராட்சி எல்லையிலிருந்து 30 கி.மீ பரப்பளவுக்கு உட்பட்ட கிராம ஊராட்சிகள்	ரூ.15/-	ரூ.200/-
3	மற்ற கிராம ஊராட்சிகள்	ரூ.10/-	ரூ.150/-

ஆனால், 2019-20ம் ஆண்டு இவ்வூராட்சி சென்னை பெருநகர எல்லையொட்டிய பகுதியாக இருந்தும், தொழிற்நிறுவனங்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள் இருந்தும் இதற்கான விளம்பர வரிகள் ஏதும் நிர்ணயம் செய்து வசூலிக்கப்படவில்லை என்பதை தணிக்கையில் அறிய நேர்ந்தது. வியாபார நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கான விளம்பர வரிகள் நிர்ணயம் செய்து வருவாய் ஈட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதன் விவரம் தணிக்கைக்கு அளிக்கப்பட வேண்டும்.

9) பண மதிப்புள்ள படிவங்கள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) சான்றொப்பத்துடன் பயன்படுத்தப்படாதது – குறைபாடு

ஊராட்சி நிதி பயன்பாட்டிற்கான பண மதிப்புள்ள படிவங்கள் பயன்படுத்தப்படும்போது அதற்கான வரவு மற்றும் செலவு விவரங்கள் உரியவாறு பதிவேட்டில் பதியப்பட்டு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சான்றொப்பத்துடன் பயன்படுத்தப்பட வேண்டும். தணிக்கை ஆண்டில் இவ்வூராட்சியில் பயன்படுத்தப்பட்ட பண மதிப்பு படிவங்கள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சான்றொப்பம் ஏதும் பெறப்படாமல் பயன்படுத்தப்பட்டுள்ளது தணிக்கையில் அறியப்பட்டுள்ளது. பயன்படுத்தப்பட்ட நிதிநிகழ்விற்கு உரிய பின்னேற்பு பெறப்பட்டு பண மதிப்பு படிவங்கள் பெறப்பட்ட, விவரங்கள் தணிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

10) பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படவில்லை – குறைபாடு

அரசு ஆணை எண்.92/ ஊ.வ.(1சி111) துறை, நாள் 26.03.1997-ல் ஊராட்சிகளில் பராமரிக்கப்பட வேண்டிய கணக்குகள் மற்றும் பதிவேடுகள் குறித்த அறிவுரைகள் வழங்கப்பட்டு 1.04.1997 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி பராமரிக்க வேண்டிய பின்வரும் முக்கிய பதிவேடுகள் இவ்வூராட்சிகளில் முறையாக பராமரிக்கப்படவில்லை. இவற்றை முறையாக பராமரிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வ. எண்.	கிராம ஊராட்சி படிவம் எண்.	பதிவேடு விவரம்
1	படிவம்-8	ஊராட்சிக்கு வரப்பெற்ற அரசு மான்யங்கள் மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வரவினங்கள்
2	படிவம்-16	ஊராட்சிக்கு சொந்தமான சொத்துக்கள் பதிவேடு
3	படிவம்-20	பணமதிப்புள்ள ரசீதுகள்/அளவு புத்தகங்கள் இதர படிவங்களின் பதிவேடு தொழில்வரி ரசீது புத்தகங்கள்.

1) தெருவிளக்கு பொருட்கள் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு – ஒப்பந்தப்புள்ளி மூலம் மின்விளக்கு உதிரிபாகங்கள் மற்றும் விளக்குகள் வாங்கப்படவேண்டும் – அரசு உத்தரவின்படி தெருவிளக்கு பராமரிப்புப்பணி மேற்கொள்ளப்படவேண்டும். ரூ.183748/-

அரசாணை (நிலை) எண்.149/ ஊ.வ.(தி3) துறை, நாள்: 16.07.98–ன்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு வாங்கப்படும் தெருவிளக்கு சாதனங்கள் ஐ.எஸ்.ஐ / ஐ.எஸ்.ஓ.9000 முத்திரை கொண்டதாக இருக்க வேண்டும். அரசாணைஎண்.223 ஊரக வளர்ச்சித் துறை, நாள்19.12.1994 ல் தெரிவித்துள்ளவாறு தெருவிளக்கு சாதனங்கள் மாற்றுவதற்கான ...முறையினை சார்ந்தே பொருட்களின் தேவைகளும் இருக்க வேண்டும் (ஒரு வருடத்திற்கு ...ரண்டு குழல் விளக்குகள், ஒரு வருடத்திற்கு ஒரு சோக், ஒரு வருடத்திற்கு மூன்று ...டார்ட்டர்கள், சோடியம் ஆவி மற்றும் மெர்குரி ஆவிவிளக்குகள் மூன்று ஆண்டுகளுக்கு இரண்டு என்ற விகிதத்திற்கு மேற்படாமல் மாற்றப்படவேண்டும்.

தெருவிளக்குகள் சாதனங்கள் வாங்க உள்ளாட்சி அமைப்புகளில் உரிய தீர்மானங்கள் பெறப்பட வேண்டும். தெருவிளக்கு உபகரணங்கள் வாங்க முடியு செய்யும்போது ரூ.1.00 ...சத்திற்கோ அல்லது அதற்கு அதிகமாகவோ வாங்கும் போது திறந்த ஒப்பந்தப்புள்ளி ...மாக சிறுதொழில் நிறுவனங்களிடம் இருந்து வாங்க வேண்டும். ஆனால் ரூ.1.00 ...சத்திற்கு குறைவாக தெருவிளக்கு உபகரணங்கள் கொள்முதல் செய்யும் போது ஒப்பந்த ...ப்புள்ளி (Limited Tender) பெற்று அதற்குரிய விதிமுறைகளை பின்பற்றி வாங்க வேண்டும். தணிக்கையாண்டில் தெருவிளக்கு பராமரிப்பிற்கு ரூ.183748/- இவ்வூராட்சியில் செலவிடப்பட்டுள்ளது.

ஆனால் இவ்வூராட்சியில் ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோராமல் தேவை ஏற்படும்போது ...ப்புள்ளி மூலம் வாங்கப்பட்டுள்ளது. மின்சாதனங்கள் தரம் குறித்து அறிய இயலவில்லை. ...ருப்புப் பதிவேடு முறையாக பராமரிக்காமையினாலும் தெருவிளக்கு விவரம் குறித்த பதிவேடு முறையாக பராமரிக்காமையினாலும் மின்சாதனங்கள் மாற்றுவதற்கான ஆணை முறையாக ...முறைப்படுத்தப்பட்டதா என /அறிய இயலவில்லை. எனவே ஆண்டுதோறும்தெருவிளக்கு பராமரிப்புப்பணி கிராம ஊராட்சிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அரசு உத்தரவுகள் முறையாக பின்பற்றப்பட்டு தணிக்கைக்கு முழுமையான விவரங்கள் அளிக்கப்படவேண்டும்.

தணிக்கையாண்டில் ஊராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் உதிரிபாகங்கள் வாங்கியமைக்கு கீழ்காணும் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

...ட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) / தனி அலுவலர் பதவிக்காலம்

...தருவிளக்கு உதிரி பாகங்கள் வாங்கியது

வ.எண்.	செ.சீ.எண். (ம) நாள்	தொகை
1	03/03.04.2019	32500
2	14/27.06.2019	27500
3	31/23.09.2019	35558
4	33/29.10.2019	8000
5	40/27.01.2019	24840
6	41/27.10.2019	4900
	மொத்தம்	**133298**

[illegible] பதவிக்காலம்

வ.எண்.	செ.சீ.எண். (ம) நாள்	தொகை
1	47/19.02.2020	25000
	மொத்தம்	**25000**

மேற்குறிப்பிட்டுள்ள செலவினத்தொகை **ரூ.183748/-** மூன்று விலைப்புள்ளிகளின் [illegible] அறிக்கையின்படி குறைந்த விலைப்புள்ளிகளின் அடிப்படையில் மின் உபகரணங்கள் [illegible] விவரம், தீர்மானம் மற்றும் நிறுவன ஒப்புகையுடன் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

இவ்வூராட்சியில் LED- மொத்தம்– 236 விளக்குகள் உள்ளது என தணிக்கையின்போது தெரிவிக்கப்பட்டது. மேற்படி கொள்முதல் படிவம் 16, 17, 18 ல் பதிந்து தெருவிளக்குகள் இனம் [illegible] விளக்கப்பட வேண்டும். மேலும் மின்கம்பங்களில் இதற்கு முன்னர் பல்புகள் மற்றும் [illegible] என்றைக்கு மாற்றம் செய்யப்பட்டது என்ற விவரம் இல்லை. பயன்படுத்தப்பட்ட [illegible] கழிவுப்பொருட்கள் பெறப்பட்டு படிவம் 21-ல் பதியப்பட்டு பொருட்கள் ஏலம் [illegible] ஏலத்தொகையினை ஊராட்சி கணக்கில் செலுத்தி செலுத்துச்சீட்டு மற்ற பிற [illegible]ருடன் தணிக்கைக்கு உட்படுத்தும் வரை தணிக்கை தடையில் வைக்கப்படுகிறது.

தெருவிளக்குகள் பழுது நீக்கி பராமரிப்பு செய்த வகையில் மேற்கொள்ளப்பட்ட தொகை ரூ.183748/- செலவினம் மேற்கொண்டமைக்குரிய மேற்படி தெருவிளக்குகள் பொருத்தப்பட்ட [illegible] எண்ணிக்கை அறியப்படாததால் மேற்படி விபரத்தினை பதிவேட்டில் பதிந்து [illegible] தணிக்கைக்கு உட்படுத்தும் வரை தணிக்கை தடையில் வைக்கப்படுகிறது. மேலும் [illegible] பொருட்கள் படிவம் 21ல் பதிந்து ஏலம் விட்டு தொகையை ஊராட்சி கணக்கில் செலுத்தி இரசீது காண்பிக்கும் வரை தணிக்கை தடையில் வைக்கப்படுகிறது.

எனவே, உடனடியாக ஊதியப்பட்டி (Pay Bill) பராமரித்து தணிக்கைக்கு காண்பிக்கப்படும் வரை இத்தடை நிலுவையில் வைக்கப்படும்.

[illegible] குடிநீர் பராமரிப்புபணி – பைப்லைன் விஸ்தரிப்பு பணி, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி பராமரிப்பு பணி – குறைபாடு ரூ.349997/-

தணிக்கையாண்டில் ஊராட்சியில் குடிநீர் பராமரிப்பு பணிகள் மற்றும் பொருட்கள் [illegible] வகையில் கீழ்காணும் விவரப்படி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குடிநீர் பராமரிப்பு

[illegible] ஊராட்சி அலுவலர்(கி.ஊ) / தனி அலுவலர் பதவிக்காலம்

வ.எண்.	செ.சீ.எண். (ம) நாள்	தொகை
1	07/03.04.2019	19775
2	08/03.04.2019	18000
3	10/23.04.2019	14877
4	11/27.06.2019	88570
5	15/01.07.2019	14710

8	24/05.0[redacted]8.2019	10800
9	25/05.0[redacted]8.2019	3500
10	26/05.0- 8.2019	13236
11	27/21.0 -8.2019	46800
12	30/23.0[redacted]9.2019	18762
13	35/30.1_0.2019	10640
14	38/22.[redacted]1.2019	7732
15	39/22.[redacted]1.2019	10800
16	42/27.[redacted]12.2019	15925
	மொத்தம்	320997

[illegible] பகலிக்காலம்

வ.எண்.	செ.சீ.எண். (ம) நாள்	தொகை
1	45/14_02.2020	15000
2	46/19_02.2020	10000
	மொத்தம்	25000

மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி பராமரிப்பு பணிகளில் ரூ.349997/- [illegible]த்திற்குரிய தீர்மானம் மற்றும் தொகை பெற்றுக் கொண்ட தினக்கூலி பட்டியல் ஒப்புகை [illegible]க்கைக்கு காண்பிக்கும் வரை தடையில் வைக்கப்படுகிறது.

குடிநீர் பைப்லைன் உடைப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் படிவம் 17 மற்றும் [illegible] பதிந்து பெறப்பட்ட கழிவிடைப் பொருட்கள் படிவம் 21 ல் பதிந்து ஏலம் விட்டு ஏலத் [illegible]னை ஊராட்சி கணக்கில் செலுத்தி ரசீது தணிக்கைக்கு உட்படுத்தும் வரை தணிக்கை [illegible]யில் வைக்கப்படுகிறது.

தணிக்கையாண்டில் குடிநீர் பகிர்மானம் பொது விநியோக குழாய்கள் மற்றும் மேல்நிலை [illegible]த்தேக்க தொட்டி, தரைமட்டத் தொட்டி, குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்பட்ட பழுதுகளை [illegible] குடிநீர் உதிரிபாகங்கள் ரூ.349997/- க்கு கொள்முதல் செய்து செலவிடப்பட்டுள்ளது. [illegible]செலவினத்திற்கு கீழ்கண்ட குறைபாடுகள் தணிக்கையில் காண்பிக்கப்பட்டது.

1. பழுதுகள் குறித்த புகார் பதிவேடு இவ்வூராட்சியில் பேணப்படவில்லை. இதனால் உண்மையான பழுதின் அடிப்படையில்தான் பழுது பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை. எனவே தெருவிளக்கு புகார் பதியப்பட்டு அதன் அடிப்படையில் பழுதுபணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. பழுது பணிகள் பழுதின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன்படி மேற்கொள்ளப்படவில்லை. இதனால் பழுதுக்கேற்ப செலவினம் மேற்கொள்ளப்பட்டது தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை.
3. குடிநீர் பராமரிப்பு தொடர்பான செலவினங்களுக்குரிய பணிகள் அனைத்தும் அளவு புத்தகங்களில் பதியப்பட்டு, விசைப்பம்பு உதவி பொறியாளர் அல்லது உதவி நிர்வாக பொறியாளரால் முறையே அளவு மற்றும் சோதனைகள் செய்யப்படவேண்டும். ஆனால் இவ்வூராட்சியில் மேற்கண்ட செலவினத்திற்கு இவ்விதிமுறைகள் பின்பற்றவில்லை.
4. பழுதுப்பணிகளின்போது குடிநீர் பகிர்மானம் பணிக்கு வாங்கி பயன்படுத்தப்படும் பி.வி.சி குழாய்கள் மற்றும் இதர உதிரி சாமான்கள் மாவட்ட கொள்முதல் குழுவினரால் [illegible] உள்ளதா என்பதை உறுதி செய்ய எவ்வித

5. பழுது பணியின்போது குடிநீர் பகிர்மான பணிக்கு வாங்கிப் பயன்படுத்தும் பி.வி.சி குழாய்களின் தரத்தை உறுதி செய்ய மாதிரிகள் எடுத்து அரசின் சோதனை ஆய்வகத்திற்கு அனுப்பப்படவில்லை. மேலும் பயன்படுத்தப்பட்ட குழாய்கள் ஐ.எஸ்.ஐ தரம் உடையதா என்பதைத் தணிக்கையில் உரிய ஆவணங்களுடன் அளிக்கப்படவில்லை.

6. பழைய பொருட்கள் இருப்பாக்கி ஏலம் விடப்படவில்லை.

7. அரசு ஆணை எண்.994/ஊ.வ.துறை நாள் 21.06.1980 மற்றும் அரசு ஆணை எண்.1151/ஊ.வ.துறை நாள் 28.07.1982-ன்படி ஊராட்சியில் உள்ள மின் மோட்டார்களில் காப்பீட்டு கழகத்தில் காப்பீடு செய்ய வேண்டும். இவ்வூராட்சியில் உள்ள மின் மோட்டார்கள் காப்பீடு செய்யப்படவில்லை. இதனால் பழுது செலவினத்திற்குரிய காப்பீட்டு தொகை பெற [illegible].

மேற்படி குறைபாடுகள் களையப்பட்டு அதன் விவரங்கள் தணிக்கைக்கு அளிக்க தெரிவிக்கப்படுகிறது.

[illegible] கிராம ஊராட்சி குழுக்கள்

[illegible] 94/ அரசாணை எண்.102 ஊராட்சி துறை நாள் – 12.07.2005 –ன்படி, கிராம ஊராட்சிகள்,

1. நியமனக்குழு
2. வளர்ச்சிக்குழு
3. வேளாண்மை மற்றும் நீர்ப்பிரி முகடு குழு
4. பணிகள் குழு
5. கல்வி குழு

[illegible] அதற்கான தீர்மானம் தணிக்கைக்கு உட்படுத்த வேண்டும்.

[illegible] பணிப்பதிவேடு முறையாகபராமரிக்கப்படாமை – குறைபாடு

தணிக்கை ஆண்டில் இந்த ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்கள் [illegible] உள்ளனர். இவர்களுக்கு பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை. [illegible] இதனை பராமரித்து தணிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும். மேலும் அரசாணை [illegible] 303 நிதி (ஊ.பிரிவு) துறை நாள். 11.10.2017–ன்படி 7–வது ஊதியக்குழு திருத்திய ஊதியம் [illegible] செய்து 01.10.2017 முதல் ஊதிய நிலுவைத்தொகை வழங்கப்பட வேண்டும்.

[illegible] காப்பீட்டுத்தொகை செலுத்தாது – குறைபாடு

தணிக்கை ஆண்டில் ஊராட்சி செயலர், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மோட்டார் [illegible] இயக்குபவர் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு ஊராட்சி நிர்வாக பங்குத் தொகை உரிய அரசு [illegible] செலுத்தப்பட வேண்டும். அதற்கான ஒப்புதல் சலான் தணிகைக்கு [illegible] வேண்டும். மேலும் 04/2019 முதல் 03/2020 முடிய ஊராட்சி பணியாளர்கள் [illegible] பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.55205/- உரிய அரசு தலைப்பில் செலுத்தி [illegible] ஒப்புதல் சலான் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

[illegible] ஊராட்சி பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கப்படும் நிலையில் ஊதியப்பட்டியல் பராமரிக்கப்படாதது – குறைபாடு

அரசாணை நிலை எண்.175 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ஊ1) துறை நாள் 05–12–2006ன் [illegible] ஊராட்சி பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க [illegible] ஊதியப்படி

[illegible] உடனடியாக ஊதியப்பட்டி (Pay Bill) பராமரித்து தணிக்கைக்கு காண்பிக்கப்படும் [illegible] நிலுவையில் வைக்கப்படும்.

[illegible] தாரர் பதிவேடு தணிக்கைக்கு காண்பிக்கப்படாமை – குறைபாடு

[illegible] தாரர் பதிவு பதிவேடு தணிக்கைக்கு காண்பிக்கப்படவில்லை. இவ்வூராட்சியில் [illegible] ஒப்பந்ததாரர் எத்தனை பேர் உள்ளனர். அவர்கள் வருடந்தோறும் [illegible] புதுப்பித்தல் [illegible] செலுத்தி ஒப்பந்த பதிவினை புதுப்பிக்கின்ற விவரம் மற்றும் ஒப்பந்த வேலைகளில் [illegible] ளாமல் இருக்கின்ற ஒப்பந்தாரர்களை பதிவு நீக்கம் செய்யப்பட்டுள்ளனரா என்ற [illegible] தணிக்கை யில் உறுதி செய்யவில்லை. மேலும் பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்களிடம் [illegible] டிற்கு ஒருமுறை தொழில்வரி பிடித்தம் செய்து ஊராட்சிக்கு தொகை வரவாக்கப்பட [illegible]

[illegible] பவுடர் வாங்கியது – இருப்பு வந்த விவரம் காட்டப்படாதது – குறைபாடு

தணிக்கையாண்டில் ரூ.59900/-க்கு ப்ளீச்சிங் பவுடர் மற்றும் இதர [illegible] கள் வாங்கப்பட்டுள்ளது. இவை இருப்பு வரப்பெற்ற விவரம் காட்டப்படவில்லை. இதனை [illegible] பதிந்து விநியோக விவரத்துடன் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும். [illegible] எண்.541 குடும்ப நலம் மற்றும் குடும்ப நலத்துறை நாள்.17.01.2001ன் படி தமிழ்நாடு [illegible] பணிகள் மூலமாக நிர்ணயம் செய்யப்பட்ட நிலையில் தரமான கிருமிநாசினி வாங்கப்பட [illegible] என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவுரைகள் பின்பற்றப்படாததால் வாங்கப்பட்ட [illegible] தரம் மற்றும் விலைகள் தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை.

[illegible] னங்கள் பிடித்தம் செய்யப்பட்டு உரிய அரசுத் தலைப்பில் செலுத்த வேண்டும்.

தணிக்கையாண்டில் குடிநீர் பணிகள் மற்றும் சாலைப்பணிகள் மேற்கொண்ட [illegible] தாரர்களிடம் கீழ்கண்டவாறு வரிப்பிடித்தம் செய்யப்பட்ட தொகை உரிய அரசு தலைப்பில் [illegible] த்தப்பட வேண்டும்.

வ. எண்.	வருடம்	வருமான வரி	GST (C) GST (S)	கட்டிட தொழிலாளர் நல நிதி	மொத்தம்
1.	11/27.06.2019	812	2030	406	3248
2.	11/27.06.2019	655	1637	327	2619
3.	11/27.06.2019	502	251	1255	2008
4.	27/21.09.2019	620	1550	310	2480
5.	27/21.09.2019	420	1050	210	1680
	மொத்தம்	3009	6518	2508	12035

மேலும் 2017–18 மற்றும் 2018–19ம் ஆண்டுகளில் ஒப்பந்ததாரர்களின் வேலை பட்டியலில் [illegible] த்தம் செய்யப்பட்ட வருமானவரி, மதிப்பு கூட்டுவரி மற்றும் கட்டிட தொழிலாளர் நல நிதி உரிய [illegible] தலைப்பில் செலுத்தப்படவில்லை. அரச வரியினங்கள் உடனுக்குடன் செலுத்தப்படாததற்கு [illegible] ராட்சி செயலரே முழுப்பொறுப்பாக்கப்படுவார். உடனடியாக வரியினங்கள் உரிய அரச [illegible] லப்பில் செலுத்தப்பட்டு ஒப்புகை இரசீது காண்பிக்கப்பட வேண்டும்.

[illegible] உள்ளது – குறைபாடு

[illegible] இந்த ஊராட்சியில் ஊரக வீடு வழங்கும் திட்ட[illegible] [illegible]4444/- இறுதி இருப்பாக உள்ளது. இத்தொகையினை மாவட்ட [illegible] [illegible]ளுருக்கு வழங்கி இக்கணக்கினை முடித்து தணிக்கைக்கு [illegible]

[illegible] ஊராட்சி பணியாளர்களின் மாதாந்திர ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட [illegible] அரசு தலைப்பில் செலுத்தப்படாதது – குறைபாடு.

[illegible] மாதாந்திர ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட குடும்ப நல நிதி [illegible]8064/- உரிய அரசு தலைப்பில் செலுத்தி செலுத்துசீட்டு தணிக்கைக்கு [illegible] வேண்டும்.

[illegible] பதியப்படாதது – குறைபாடு

[illegible] ஊராட்சி ஒன்றியம் சாணாபுத்தூர் ஊராட்சி 2019–20ம் ஆண்டு குடிநீர் [illegible] தெருவிளக்கு பராமரிப்பு, குப்பை அகற்றுதல், கழிவுநீர் அகற்றுதலுக்கான புகார் [illegible]க்கு காண்பிக்கப்படவில்லை. மேலும் விவரம் குறித்து பதிவேடு பேணப்பட்டு [illegible] காண்பிக்கப்பட வேண்டும்.

[illegible] போது கீழ்காணும் பதிவேடுகள் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வில்லை – [illegible]

வ.எண்.	பதிவேடுகள்
1.	படிவம் –14,16,17,18,20,21,22
2.	படிவம் – 24,25,26,27,28

[illegible]கைத் தடைகள் சுருக்கம்.

[illegible]கையாண்டின் முடிவில் (2019-20) இவ்வூராட்சியில் மொத்தம் 83 தணிக்கை [illegible]ளன. இத்தணிக்கை தடைகளை விரைவில் நிவர்த்தி செய்ய துரித நடவடிக்கை [illegible]பட வேண்டும்.

[illegible]	வருடம்	தணிக்கை தடை எண்கள்	தணிக்கை தடை எண்ணிக்கை
1	2014-15	1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,15	15
2	2015-16	3,6,10,13,14,16,17,18	8
3	2016-17	1,2,5,7,8,9,13,14,15,17,19,20	12
4	2017-18	3,6,13,14,17	5
5	2018-19	1 முதல் 20 வரை	20
6	2019-20	1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,15,16,17, 18,19,20,21,22,23	23
		மொத்தம்	83

[illegible]லைவர்
[illegible] ஊராட்சி

துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
(தணிக்கை)
கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியம்

[illegible]

[illegible]	[illegible]			[illegible]			[illegible]		
	நிலுவை	நடப்பு	மொத்தம்	நிலுவை	நடப்பு	மொத்தம்	நிலுவை	நடப்பு	மொத்தம்
ட்டுவரி	-	53670	53670	-	30720	30720	-	22950	22950
ரலக வரி	-	5367	5367	-	3072	3072	-	2295	2295
தொழில் வரி	-	40734	40734	-	40734	40734	-	-	-
ார்கட் ஏலம்	-	-	-	-	-	-	-	-	-
னியார் குடிநீர் குழாய் இணைப்பு கட்டணம்	-	-	-	-	-	-	-	-	-
னியார் குடிநீர் குழாய் வைப்புத்தொகை	-	-	-	-	-	-	-	-	-
இதர வரவு	-	-	-	-	-	-	-	-	-
உரிமக்கட்டணம்	-	-	-	-	-	-	-	-	-
மொத்தம்	-	99771	99771	-	74526	74526	-	25245	25245

தலைவர்
சாண்ணியூர் ஊராட்சி
மிடிப்பூண்டி ஒன்றியம்

துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
(தணிக்கை)
கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம்

[illegible] மாவட்டம் — கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியம்

[illegible] ஊராட்சியின் 2019-20-ம் ஆண்டு காலத்திற்குரிய வரவு மற்றும் செலவின விவரம்

ஊராட்சி நிதிக் கணக்கு எண். I

[illegible]	ரூ.	பை	செலவுகள்	ரூ.	பை
[illegible]	30720	00	ஊதியம்	93000	00
[illegible]	3072	00	மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி பராமரிப்பு	39600	00
[illegible]	40734	00	குடிநீர் பராமரிப்பு	124027	00
[illegible] மானியம்	575725	00	தெருவிளக்கு பராமரிப்பு	157448	00
[illegible]	1012	51	தெருவிளக்கு பொருத்தியதற்கான கூலி	26300	00
[illegible]	45	00	பொது சுகாதாரம்	59900	00
[illegible] தொகை	565	00	விசை பம்பு பராமரிப்பு	135370	00
[illegible]	10	00	நூலக வரி செலுத்தியது	9967	00
			ஈமச்சடங்கு மான்யம்	17500	00
			வங்கி பிடித்தம்	118	00
			குடிநீர் பராமரிப்பு ஆட்கள் கூலி	39000	00
			ஆழ்துளை கிணறு பராமரிப்பு	12000	00
			இதரச் செலவினம்	19685	00
வரவு	651883	00	செலவு	733915	00
ஆரம்ப இருப்பு	125469	79	இறுதி இருப்பு	43437	79
மொத்தம்	777352	79	மொத்தம்	777352	79

K. [signature]

துணை வட்டார வளர்ச்சி அலுவலர்

[illegible] மாவட்டம்

கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியம்

[illegible]புத்தூர் ஊராட்சியின் 2019-20-ம் ஆண்டு காலத்திற்குரிய
வரவு மற்றும் செலவின விவரம்

ஊராட்சி நிதிக் கணக்கு எண். II

[illegible]	ரூபாய்	பை	செலவுகள்	ரூபாய்	பை
[illegible]	750000	00	மின் கட்டணம்	1191097	00
[illegible]	46385	00	வங்கி பிடித்தம்	118	00
வரவு	**796385**	**00**	செலவு	**1191215**	**00**
[illegible] இருப்பு	**1459332**	**69**	இறுதி இருப்பு	**1064502**	**69**
மொத்தம்	**2255717**	**69**	மொத்தம்	**2255717**	**69**

[illegible]

K. [signature]
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
(தணிக்கை)
கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியம்

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியம்

சாணாபுத்தூர் ஊராட்சியின் 2019-20-ம் ஆண்டு காலத்திற்குரிய
வரவு மற்றும் செலவின விவரம்

ஊராட்சி நிதிக் கணக்கு எண். III

[illegible]	ரூபாய்	பை	செலவுகள்	ரூபாய்	பை
[illegible]	14445	00	மாவட்ட ஆட்சியருக்கு திரும்ப அளித்தல்	275000	00
			வீட்டு பட்டியல்	73906	00
			வங்கி பிடித்தம்	118	00
வரவு	14445	00	செலவு	349024	00
ஆரம்ப இருப்பு	590126	92	இறுதி இருப்பு	255547	92
மொத்தம்	604571	92	மொத்தம்	604571	92

துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
(தணிக்கை)
கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியம்

திருவள்ளுர் மாவட்டம் கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியம்

சாணாபுத்தூர் ஊராட்சியின் 2019-20-ம் ஆண்டு காலத்திற்குரிய
வரவு மற்றும் செலவின விவரம்

ஊராட்சி நிதிக் கணக்கு எண். VII

வரவுகள்	ரூபாய்	பை	செலவுகள்	ரூபாய்	பை
மாநில நிதிக்குழு மானியம்	538170	00	ஊராட்சி பணியாளர்களின் ஊதிய செலவீனம்	469156	00
வங்கி வட்டி	5461	00	வங்கி பிடித்தம்	118	00
வரவு	543631	00	செலவு	469274	00
ஆரம்ப இருப்பு	60706	58	இறுதி இருப்பு	135063	58
மொத்தம்	604337	58	மொத்தம்	604337	58

தலைவர்
சாணாபுத்தூர் ஊராட்சி
கும்மிடிபூண்டி ஒன்றியம்

துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
(தணிக்கை)
கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியம்

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியம்

சாணாபுத்தூர் ஊராட்சியின் 2019-20-ம் ஆண்டு காலத்திற்குரிய
வரவு மற்றும் செலவின விவரம்

ஊராட்சி நிதிக் கணக்கு எண். VIII

வரவுகள்	ரூபாய்	பை	செலவுகள்	ரூபாய்	பை
தூய்மை காவலர்கள் ஊதியத்திற்கு வரவு	195000	00	ஊராட்சி தூய்மை காவலர்கள் ஊதியம்	195000	00
வங்கி வட்டி வரவு	310	00	வங்கி பிடித்தம்	283	00
வரவு	**195310**	**00**	செலவு	**195283**	**20**
ஆரம்ப இருப்பு	**241**	**20**	இறுதி இருப்பு	**268**	**00**
மொத்தம்	**195551**	**20**	மொத்தம்	**195551**	**20**

தலைவர்
சாணாபுத்தூர் ஊராட்சி.

துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
(தணிக்கை)
கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியம்

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியம்

சாணாபுத்தூர் ஊராட்சியின் 2019-20-ம் ஆண்டு காலத்திற்குரிய
வரவு மற்றும் செலவின விவரம்

<u>ஊராட்சி நிதிக் கணக்கு எண். IX</u>

வ. எண்	வரவுகள்	ரூபாய்	பை	செலவுகள்	ரூபாய்	பை
1.	மாநில நிதிக்குழு மான்யம்	588851	00	செலவுகள் இல்லை		
2.	வங்கி வட்டி வரவு	42109	00			
	வரவு	630960	00	செலவு	-	
	ஆரம்ப இருப்பு	1080957	00	முடிவு இருப்பு	171197	00
	மொத்தம்	1711917	00	மொத்தம்	171197	00

தலைவர்
சாணாபுத்தூர் ஊராட்சி

துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
(தணிக்கை)
கும்மிடிபூண்டி ஊராட்சி ஒன்றியம்

தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கைச் சட்டம், 2014

(THE TAMIL NADU LOCAL FUND AUDIT ACT, 2014)
சட்ட எண் 24/2014

தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கைச் சட்டம், 2014
(THE TAMIL NADU LOCAL FUND AUDIT ACT, 2014)
சட்ட எண் 24/2014

அனைத்து உள்ளாட்சி அதிகார அமைப்புகளுக்கும் மற்றும் குறிப்பிட்ட சில பிற அதிகார அமைப்புகளுக்கும் அல்லது நிறுவனங்கள் மற்றும் நிதியத்திற்கும் மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்றும் அதற்கு சார்வுறுவான பொருட்பாடுகளுக்காக பயனுடைய மற்றும் திறமையான தணிக்கை முறைக்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்.

மாநில அரசு தனது அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கான தணிக்கை முறையொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் மற்றும் மாநிலத்தில் ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு வகையிலும் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கைக்கு மைய அரசுக் கணக்குத் தணிக்கைத் தலைவர் தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் மேற்பார்வையினை வழங்க வேண்டும் என பதிமூன்றாவது மத்திய நிதிக்குழு தனது பரிந்துரையில் தெரிவித்துள்ளது என்பதாலும்;

உள்ளாட்சி நிதியங்களின் தணிக்கையை மற்றும் அதனை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான தணிக்கையினை உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநர் தணிக்கை செய்வதற்கு அவருக்கு அதிகாரம் அளிப்பதற்கு வகை செய்வதற்காக சட்டமொன்றினை இயற்றுவதற்கு இரண்டாவது மாநில நிதிக்குழுவும் தனது பரிந்துரையில் தெரிவித்துள்ளது.

மாநில அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள உள்ளாட்சி அதிகார அமைப்புகள் மற்றும் பிற அதிகார அமைப்புகள் இந்திய அரசின் மற்றும் மாநில அரசின் மானியங்களை பயனுள்ள வகையில் செலவு செய்வதனை உறுதி செய்வதற்கு என்பதாலும், மற்றும் மாநில அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள உள்ளாட்சி அதிகார அமைப்புகள் மற்றும் பிற அமைப்புகள் பொதுப் பணத்தை எவ்வாறு செலவு செய்கின்றன என்பதன் மீது பொது நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கும் என்பதாலும்;

தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கைச் சட்டம், 2014
(சட்ட எண் 24/2014)

இது இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமாக இயற்றப்படுவதாகுக.

பிரிவு 1. குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்:

(1) இந்தச் சட்டம் 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.
(3)இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பிரிவு 2. பொருள் வரையறைகள்:,

(1) இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி

(a) **“தணிக்கை”** நூறு சதவீத தணிக்கை, பிந்தைய தணிக்கை, சோதனை தணிக்கை, சிறப்புத் தணிக்கை மற்றும் அரசால் காலத்திற்கேற்ப குறிப்பிடலாகும் அத்தகைய பிற கணக்குகளின் ஆய்வினையும் உள்ளடக்கும்

(b) **"நூறு சதவீத தணிக்கை”** என்பது நிதி ஆண்டு முழுவதற்குமான ஒரு குறிப்பிட்ட கணக்கின் அனைத்து பரிமாற்றங்கள் அல்லது இயக்குநரால் குறிப்பிடப்படலாகிறவாறான அத்தகைய காலத்திற்கான பிந்தைய தணிக்கை என்று பொருள்படும்;

(c) **“ஒருங்கிசைவு தணிக்கை”** என்பது தினமும் நடக்கின்ற பரிமாற்றங்களின் கணக்குகளின் மீது தொடர்ந்து நடைபெறவுள்ள பிந்தைய தணிக்கை என்று பொருள்படும்;

(d) **“இயக்குநர்”** என்பது 3 ஆம் பிரிவின்படி பணியமர்த்தம் செய்யப்பட்ட உள்ளாட்சி நிதித் தணிக்கையின் இயக்குநர் என்று பொருள்படும் மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கையின் இயக்குநரின் செயற்பணிகளைச் செய்வதற்கு அரசால் அதிகாரமளிக்கப்பெற்ற நபர் எவரையும் உள்ளடக்கும்;

(e) **"நிர்வாக அதிகார அமைப்பு”** என்பது அந்த அதிகார அமைப்பின் நிதியத்தை நிர்வகிப்பதற்கு உற்றமைந்துள்ள அதிகாரத்துடன் உள்ளாட்சி அதிகார அமைப்பொன்றின் தலைமை நிர்வாக அலுவலர் அல்லது பிற அலுவலர் எவரும் என்று பொருள்படும்;

(f) **“அரசு”** என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(g) **“உள்ளாட்சி அதிகார அமைப்பு”** என்பது,

(i) தற்போதைக்கு நடைமுறையிலுள்ள தொடர்புடைய சட்டத்தின்படி அமைத்து உருவாக்கப்பட்ட நகராட்சி அல்லது நகராட்சி மன்றம் அல்லது பேரூராட்சி / ஒன்றிய மன்றம் அல்லது கிராம ஊராட்சி எதுவும்; அல்லது

(ii) இணைப்புப் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள அரசின் சட்டம் அல்லது ஆணை எதனாலும் அல்லது எதன்படியும் ஏற்படுத்தப்பட்ட பிற அதிகார அமைப்பு, அமைப்பு அல்லது நிறுவனம் என்று பொருள்படும்.

(h) **"உள்ளாட்சி நிதியம்"** என்பது உள்ளாட்சி அதிகார அமைப்பொன்றினால் மற்றும் இணைப்புப் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பிற நிதியங்கள் எதனாலும் நிர்வகிக்கப்படும் நிதியம் என்று பொருள்படும்;

(i) **"உள்ளாட்சி நூலக அதிகார அமைப்பு"** என்பது 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் நாட்டுபுறத் திட்டச் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 4/1948) அமைத்துருவாக்கப்பட்ட உள்ளாட்சி நூலக அதிகார அமைப்பு என்று பொருள்படும்;

(j) **"உள்ளாட்சி திட்ட அதிகார அமைப்பு"** என்பது 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் நாட்டுப்புறத் திட்டச் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட உள்ளாட்சி திட்ட அதிகார அமைப்பு என்று பொருள்படும்;

(k) **"சந்தைக் குழு"** என்பது 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருளை சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறை) சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட சந்தைக் குழு என்று பொருள்படும்;

(i) **"பின் தணிக்கை"** என்பது முடிக்கப்பட்ட பரிமாற்றங்களுக்குப் பிறகு நடத்தப்பட்ட விரிவான தணிக்கை என்று பொருள்படும்;

(m) **"இணைப்புப் பட்டியல்"** என்பது இந்தச் சட்டத்தின் இணைப்புப் பட்டியல் என்று பொருள்படும்;

(n) **"சிறப்புத் தணிக்கை"** என்பது குறிப்பிடப்பட்ட இனமொன்றிற்கு அல்லது முழுமையான ஆய்வு தேவைப்படும் தொடர்ச்சியான இனங்களின் மீதான தணிக்கை ஒன்று என்று பொருள்படும். மற்றும் தணிக்கையால் ஏற்கனவே உள்ளடக்கப்பட்ட காலமொன்றிற்கான கணக்குகளின் மறு தணிக்கையையும் உள்ளடக்கும்;

(o) **"மாநிலம்"** என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்;

(p) **"தண்டனைக் கட்டணம்"** என்பது பணம் அல்லது பிற சொத்து எதனின் இழப்புக்காக, வீணாக்கியதற்காக, தவறாகப் பயன்படுத்தியதற்காக அல்லது கையாடல் செய்ததற்காக ஒரு நபர் செலுத்துவதற்கு பொறுப்புடைய தொகை என்று பொருள்படும்;

(q) **"பல்கலைக்கழகம்"** என்பது மாநிலச் சட்ட மன்றத்தின் சட்டமொன்றினால் ஏற்படுத்தப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட பல்கலைக்கழகம் என்று பொருள்படும்.

பிரிவு 3. இயக்குநரின் பணியமர்த்தம்:

(1) அரசு, உள்ளாட்சி நிதித் தணிக்கையின் இயக்குநராக வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய தகுதியைக் கொண்டிருக்கும் நபர் ஒருவரை அறிவிக்கையினால் பணியமர்த்தம் செய்யலாம்.

(2) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையென தோன்றலாகிறவாறான உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் அத்தகைய பிற அலுவலர்களையும் பணியமர்த்தம் செய்யலாம்.

(3) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் அனைத்து அலுவலர்களும் மற்றும் பணியாளர்களும் இயக்குநருக்குக் கீழ் பணியாற்றக் கூடியவர்களாக இருப்பர். இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதியின்படி, பணியமர்த்தம் செய்யப்பட்டவர்கள் அவர்களுடைய செயற்பணிகளைச் செய்கையில் அவர்கள் மீது இயக்குநர் பொதுக் கண்காணிப்பையும், கட்டுப்பாட்டையும் கொண்டிருப்பார்.

(4) உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் (1) ஆம் உட்பிரிவில் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும் இந்தச் சட்டம் தொடங்குவதற்கு முன்பு செயல்படுபவராக இருப்பவர், இந்தச் சட்டத்தின்படி இயக்குநராக பணியமர்த்தம் செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுவார்.

பிரிவு 4. கணக்குகளின் தணிக்கை:

தற்போதைக்குச் சொல்லாற்றலிலுள்ள பிற எந்தச் சட்டத்திலும் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், ஆனால் 1971-ஆம் ஆண்டு மைய அரசு கணக்குத் தணிக்கைத் தலைவர் (கடமைகள் அதிகாரங்கள் மற்றும் பணி வரைக்கட்டுகள்) சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு இயக்குநர் தணிக்கை செய்ய வேண்டும் அல்லது இது தொடர்பாக பொது அல்லது சிறப்பு ஆணையினால் அதிகாரமளிக்கப்பெற்ற உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் அலுவலர் ஒருவரால் தணிக்கை செய்வதற்கு விழைதல் வேண்டும். உள்ளாட்சி அதிகார அமைப்பொன்றின் கணக்குகள் அல்லது இந்தச் சட்டத்தினால் அல்லது இந்தச் சட்டத்தின்படி வகை செய்யப்பட்டுள்ள முறையில் உள்ளாட்சி நிதியத்தை அவ்வாறு அதிகாரமளிக்கப் பெற்ற அலுவலர் தணிக்கை செய்ய வேண்டும். இந்தச் சட்டத்தின்படி தணிக்கை செய்வது தொடர்பாக இயக்குநரின் அத்தகைய அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டும் மற்றும் அத்தகைய செயற்பணிகளைச் செய்ய வேண்டும்.

பிரிவு 5. இணைப்புப் பட்டியலில் உள்ளடங்காத குறித்த சில அதிகார அமைப்புகள், அமைப்புகள் நிறுவனங்கள் அல்லது நிதியங்களின் கணக்குகளை தணிக்கை செய்வதற்கு அதிகாரம்:

இயக்குநர், அரசின் முன் ஒப்புதலிளிப்புடன் மற்றும் 4-ஆம் பிரிவின் வகை முறைகளுக்குக் குந்தகமின்றி இணைப்புப் பட்டியலில் உள்ளடங்கியிராத அதிகார அமைப்பு, அமைப்பு நிறுவனம் அல்லது நிதியம் அத்தகைய அதிகார அமைப்பு, அமைப்பு நிறுவனம் அல்லது நிதியத்தின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள இயக்குநரும் நபருக்குமிடையே ஏற்றுக் கொள்ளப்படலாகிறவாறான அத்தகைய வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு கணக்குகளைத் தணிக்கை செய்யலாம்.

பிரிவு 6. எந்த முறையில் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்:

